சிலுவை சுமந்தோன்

ரூ.பா 40

விலை [illegible]

இரண்டாம் பதிப்பு—பிரதிகள் 1500—1907

மூன்றும் பதிப்பு —பிரதிகள் 2000—1956

THE CROSS-BEARER

சிலுவை சுமந்தோன்

Dass Press, Nazareth

1956

பொருள் அட்டவணை

		பக்கம்
I.	சிலுவை சுமக்க மாதிரி காண்பித்தவர் ...	1
II.	சிலுவையைக் கொடுத்தது	9
III.	சிலுவையைத் தெரிந்துகொள்ளல் ...	15
IV.	சிலுவையின் பாரத்தைக் குறைத்தல் ...	21
V.	சிலுவையை வணங்குதல்	25
VI.	சிலுவை சுமக்க வெட்கப்படல்	31
VII.	சிலுவையைக்குறித்து மேன்மை பாராட்டுதல்	35
VIII.	சிலுவையைத் தன் இஷ்டப்படி சுமக்குதல்	39
IX.	சிலுவையைக் கிறிஸ்துவின்பின் சுமக்குதல்	48
X.	சிலுவை பாரமாயிருக்குதல்...	55
XI.	சிலுவையின் பாரத்தைத் தணித்தல் ...	69
XII.	சிலுவையும் கிரீடமும்	79



சிலுவை சுமந்தோன்

I. சிலுவை சுமக்க மாதிரி காண்பித்தவர்

"மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும் மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும் இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்." ஏசா. 52: 14.

நான் ஓர்காலத்தில் மனவேதனைப்பட்டு அப்புறம் ஆறுதலடைந்து தூக்கக்கலக்கமாயிருக்கும்போது ஒரு தரிசனங்கண்டேன். அதாவது:

மத்தியானவேளையில் எருசலேம் பட்டணத்தின் ஓர் வீதியில் அதின் வடபாகத்தைநோக்கி ஒரே கூட்டமாகத் தள்ளிக்கொண்டுபோகும் திரளான ஜனக்கூட்டத்தின் நடுவில் நின்றதாக இருந்தேன். என்ன காட்சி! என் ஆண்டவர் அங்கேயிருந்தார். ஐயோ! அவர் இருந்த நிலைமையென்ன? அவரைச் சுற்றிலும் இருந்தவர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவரை நேசித்த கொஞ்சப்பேர் தூரத்திலே நின்றார்கள். அவர்களும் பலவீனராயும், மனம் நொறுங்கினவர்களாயும், நம்பிக்கையற்றவர்களாயும், பாடுபடுகிற அவருக்கு அனு

தாபமான ஒரு வார்த்தையும் சொல்லமுடியாதவர்களாயும் இருந்தார்கள்.

மூர்க்கமான முரட்டுச் சேவகர்களோ அவரை மரணைக்கினைக்கென்று கூட்டிப்போனார்கள். மனிதர் யாவரையும் இரட்சிக்கும்படி வானத்திலிருந்து வந்த அவருக்கு அவர்கள் கொடுத்தது தூஷணங்களும் இழிவான வார்த்தைகளும் பகடியும் கொடுமையான பரியாசமுமே. சேவகரின் பின்னல் வேதபாரகரும் ஆசாரியரும் பரிசேயரும் அவருக்குத் தங்கள் பகை விரோதம் காட்டிக்கொண்டுகூட நடந்ததாகவும் கண்டேன்.

ஆச்சரியமான அவரை நான் பார்த்தபோது தன் தோளின்மேல் வைத்த கரடான மரத்தின் பாரத்தால் அவர் இளைத்துத் தள்ளாடிக்கொண்டிருந்தார். அது அவர் தாங்கக்கூடாத சுமை. இராத்திரியில் நித்திரையின்றி அவர் அடைந்த மனவேதனையும் காலையில் நடந்த பயங்கரமான செயல்களும் அவரது பரிசுத்த திருமேனியின் பலத்தையும் குலைத்துப்போடுகிறதாயிருந்தது. துயர்பாதை (Via Dolorosa) என்ற தெருவில் முகங்குப்புற அவர் விழுந்ததாகவும் கண்டேன். நம்முடைய பாவப்பாரம் அவர்மேல் சுமத்தப்பட்டதாகவும், சிலுவையானது அவரைத் தாங்குமுன் அவர் சிலுவையைத் தாங்கினதாகவும், இதினால் அவர் தேகம் கஸ்தியடைந்ததாகவும், இதையும் அவர் மனுஷராகிய நமக்காகச் சுமந்ததாகவும் என் ஞாபகத்திற்கு வந்தது.

நான் நின்று இந்தக் காட்சியைக் கவனித்துப்பார்த்து, இது இப்படியா? இவர் என் ஆண்டவரா? பலவீன என் மனுஷசுபாவத்தையெடுத்து என் பாவப்பாரத்தால் இளைத்துக் கீழேவிழுகிற என் தெய்வமா? என்னை நேசிக்கும் அன்பின் அவதாரமே! சாந்தமும் பொறுமையுமுள்ள அன்பு, சகலத்தையும் சகிக்கும் அன்பு ஆகிய இந்தக் காட்சியின் அருமை, முன் எனக்கு விளங்காமற்போயிற்றே! என்று ஓலமிட்டேன்.

என் இஷ்டர்களிலொருவர் என் குற்றத்தினால் மிகவும் வருத்தமடைய வேண்டியதாயிருந்தால் என் மனது உருகவேண்டுமே. என் குற்றத்தின் தன்மையையும் பாடுபடுகிறவரின் மேன்மையையும் அவருடைய வருத்தத்தின் உக்கிரத்தையும் எனக்காக அவர் இதெல்லாம் சகித்து சந்தோஷங்கொள்வதையும் நான் யோசித்து அதிக வருத்தப்படவேண்டியதாயிருக்க, எனக்காக என் ஆண்டவர் சிலுவையைச் சுமக்கிறதை நான் நிர்விசாரமாய்ப் பார்ப்பதற்கு ஏதோ நான் விலக்கவேண்டிய காரணம் நிச்சயமாய் இருக்கிறது.

இவ்விஷயமாய் என் பக்தி வளரவேண்டும். எல்லாப் புத்திக்கும் மேலான கிறிஸ்துவின் அன்பின் உயரத்தையும், ஆழத்தையும், நீளத்தையும் அகலத்தையும் நான் மென்மேலும் அறிய, அறிய, அதுவே என் ஜீவியத்தை முழுவதும் உயிர்ப்பித்து உருவாக்கி நடத்தவேண்டும்.

சிலுவை சுமக்கிற அவருடைய மாதிரியைக் கற்று அவரைப் பார்க்கிறதினால் நான் "ஆவியாயிருக்கிற

கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து" மறுரூபப்பட்டு பரிசுத்த மடைய வேண்டும். (2 கொரி. 3: 18.)

ஆம், என் நேச ஆண்டவரே, இதுதான் எனக்கு ஜெயம். உமக்காக நான் எல்லாவற்றையும் விட்டு எல்லாவற்றையும் சகித்து எல்லாவற்றையும் செய்து உமக்காகக் காத்திருந்து ஊழியஞ்செய்யக்கூடும்.

எனக்காகச் சிலுவை சுமப்பதில் நொந்துபோன அவரைப் பார்ப்பதே எனக்கு மோக்ஷானந்தம்.

இரத்தம் காயம் குத்தும்
நிறைந்து நிந்தைக்கே
முட்கிரீடத்தாலே சுற்றும்
குத்துண்ட சிரசே,
முன் திவ்ய மேன்மை கொண்ட
நீர் லச்சை காண்பதேன்?
ஐயோ! வதைந்து நொந்த
உம்முன் பணிகிறேன்.

நீர் பட்ட வாதை யாவும்
என் பாவப் பாரமே;
இத்தீங்கும் நோவும் சாவும்
என் குற்றம், கர்த்தரே!
இதோ! என்றைக்கும் சாக
நான் பாத்திரன் ஆனேன்,
ஆனாலும் நீர் அன்பாக
என்னைக் கண்ணோக்குமேன்.

நான் உம்மைத் தாழ்மையாக
வணங்கி, நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காக
துதிப்பேன், யேசுவே.
நான் உம்மில் ஊன்றி நிற்க
சகாயராய் இரும்;
உம்மோடு நான் மரிக்க
கடாட்சித்தருளும்.

எங்கே சுமந்துபோகிறீர் சிலுவையை? நீர்
எங்கே சுமந்துபோகிறீர்?

எங்கே சுமந்துபோகிறீர்? இந்தக் கானலில் உம
தங்கம் முழுதும் நோக, ஐயா, என் நேசநாதா,— எங்

தோளில் பாரம் அழுந்த, தூக்கப் பெலம் இல்லாமல்
தாளும் தத்தளிக்கவே, தாப சோபம் உற, நீர்— எங்

வாதையினால் உடலும் வாடித் தவிப்புண்டாக,
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர,—

தாயார் அழுதுவர, சார்ந்தவர் பின்தொடர,
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பிவர;— எங்

மாசணுகாத சத்திய வாசகனே உமது
தாசர்களைக் காக்கவும் தாங்காச் சுமையை எடுத்—தெங்

II. சிலுவையைக் கொடுத்தது

"ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்." மத். 16: 24.

முந்தித் தன் சிலுவையின்கீழ் பலவீனத்தால் விழுந்த அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் காணும்படி (2 பே. 1: 16) அவரின் பிரியமுள்ள சீஷர் மூன்று பேர்களுடன் நானும் நிற்கிறதாகக் கண்டேன். அவர் முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிருந்தது. அவருக்குமுன் முகமலர்ந்த ஒரு வாலிபன் மோக்ஷ பிரயாணம் செய்கிற பரதேசிபோல நின்றுகொண்டிருந்தான். ஆண்டவர் தம் சிலுவையைப் போன்றதும் சிறிது லேசானதுமானதொன்றைத் தம் கையில் எடுத்து, உன் சிலுவையை எடுத்து என்னைப் பின்பற்றிவா, என்று சொல்லி, அந்த வாலிபனுக்குக் கொடுக்கிற பாவனையாயிருந்தது.

இந்தக் கட்டளையைக் கேட்டவுடன் அவன் முகம் மிகவும் துக்கமடைந்து பின்வாங்கினான். அவனுக்குக் கிறிஸ்துவின்பேரில் கொஞ்சம் பக்தியும் வணக்கமும் இருந்ததாகத் தெரிந்தாலும் அவனுடைய திரும்பின முகமும், கீழ்நோக்கின அவன் கண்களும் அவன் இருதயத்திலுள்ள வருத்தமான போராட்டத்தைக் காட்டின. என்றாலும் ஆண்டவர் பொறுமையோடும் அன்போடும் சிலுவையை நீட்டிப் பக்ஷமாய்ப் பேசினார்.

ஆண்டவர்: என் பிரிய சீஷனே, உனக்காகச் சந்தோஷமாய்ப் பாடுபட்டேன்; உனக்காக வெட்கத்தையும் பாராமல் சிலுவையைச் சகித்தேன்; எனக்காக நீ இப்போது இதை எடுத்துச் சுமக்கமாட்டாயா?

சீஷன்: என்ன! ஆண்டவரே, உம்மிடத்தில் வருகிற எல்லாருக்கும் இளைப்பாறுதலைத் தருவேன் என்று வாக்களிக்கவில்லையா? இனி என் ஜீவகாலம் கலப்பில்லாச் சந்தோஷமாய் இருக்கும் என்று நினைத்தேன். இன்பமும் சமாதானமும் உண்டாகுமென்று எதிர்பார்த்தேன். ஞானத்தின் வழிகள் இனிதானவைகளென்று நான் கேள்வியுற்றிருக்க அப்படியிராமல் இப்போது சிலுவைதான் தெரிகிறது. நான் உலகத்தாருய் ஜீவிக்கும்போது வராத கஷ்டங்கள் இப்போது என்னை வாதிக்கின்றன. அலையைப்போல வருத்தத்தின்மேல் வருத்தம் என்னை அலைக்கழிக்கிறது.

ஆண்டவர்: என் பிள்ளையே, இங்கே துன்பப்படுகிறதினுல் சந்தோஷமடைவாய். என்னைப் பின்பற்றி எனக்குக் கீழ்ப்படிகிறதினுல் பரிசுத்தனுவாய். சிலுவையைச் சுமப்பதில் சந்தோஷம் பெறுவாய். தாழ்வடைந்தால் உயர்வடைவாய். இணங்கினுல் ஜெயமடைவாய். ஜீவனை இழந்தால் அதைக் கண்டடைவாய். ஆகையால் உன்னைத்தான் நீ வெறுக்கவேண்டும். திருப்தி தராத சுகபோகத்தையும் மதியை மயக்குகிற உலக ஆடம்பரத்தையும் தள்ளிவிடு. என் சீஷர் எப்படியிருக்கவேண்டுமென்று மாதிரி காண்பித்திருக்கிறேன். பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவ

ரும் பாவிகளுக்கு விலகினவருமானவரைப் போலி ருக்கவேண்டும். (எபி. 7 : 26). என் பிள்ளையே, உன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வா என்று மறுபடியும் சொல்லுகிறேன்.

சீஷன்: நீர் எனக்கு நியமித்திருக்கிற இந்தத் துன் பத்தைத் தவிர வேறெதையும் சகிப்பேன்.

ஆண்டவர்: மற்றவர்களுடைய சிலுவையை அல்ல, உன் சொந்தச் சிலுவையைச் சுமக்கத்தான் அழைக்கி றேன்.

சீஷன்: இந்தக் கடுமையான நிலைமையைச் சற் றென்கிலும் மாற்றக்கூடாதா? உம்மைப் பின்பற்ற எனக்கு விருப்பந்தான். ஆனால் என் அந்தஸ்தையும் என் சுகங்களையும் என் உலக காரியங்களையும் எப்படி மனதார விட்டு வருவேன்?

ஆண்டவர்: உன் சிலுவையை எடுத்து என் பின் வந்தால்தான் எனக்குச் சீஷன் ஆவாய்.

சீஷன்: என் பிரிய எண்ணங்களெல்லாவற்றையும் விட்டுவிட வேண்டுமோ? பிற்காலத்தில் உலக இன்பங் களெல்லாவற்றையும் அனுபவிக்கலாமென்று சிறுபிரா யமுதல் சந்தோஷமாய் எதிர்பார்த்துக்கொண்டிருந் தேன். என் கவலையையெல்லாம் நீக்கி என் விருப் பத்தை நிறைவேற்றி என்னையடுத்ததெல்லாம் எனக் குச் சுகத்தையுண்டாக்கும்படி போதுமான ஆஸ்தி எனக்கிருந்தால் நான் நினைத்த உத்தம ஜீவியம் நிறை வேறுமென்று எண்ணியிருந்தேன்.

ஆண்டவர்: என் பிரிய பிள்ளையே, உன் எண்ணம் முழுவதும் தவறு. சுகபோகங்களும், சந்தோஷமும் கனமும் இச்சீவியத்தின் முக்கிய நோக்கமல்ல. இவை உன் உண்மையான க்ஷேமத்திற்கு அவசியமுமல்ல. சிலுவையினுல்தான் கிரீடமடையலாம். யோவானும் யாக்கோபும் தங்களுக்கு மகிமை வேண்டுமென்று கேட்டபோது, என் கசப்பான பாத்திரத்தில் பானம் பண்ணி என்னுடன் பாடுபடவேண்டுமென்று சொன்னேன். இவ்வுலகத்தில் துன்பமும், என்னிலோ ஆறுதலுமடைவார்களென்று உனக்கு முன் வந்த உன் சகோதரரெல்லாருக்கும் வெளிப்படுத்தியிருக்கிறேன். என்னோடும் எனக்காகவும் பாடு அனுபவிப்பதில் சந்தோஷமும் வேலையில் சுகமும் துக்கத்தில் ஆனந்தமும் சிறைச்சாலையில் கீதமும் அனுபவிக்க பாரம் சுமக்கிறவர்களை உலகத்தைவிட்டுவர அழைத்திருக்கிறேன். உலகத்தாருக்கு இடறுதலாயிருக்கிற சிலுவையின் இரகசியம் இதுவே. இதினுல் நீ இடறிவிழக் கூடாது.

"வா, பாவி, இளைப்பாற வா,
என் திவ்ய மார்பிலே
நீ சாய்ந்து சுகி," என்பதாய்
நன் மீட்பர் கூறவே,
இளைத்துப்போன நீசனுய்
வந்தாறித் தேறினேன்;
என் பாரம் நீங்கி, யேசுவால்
சந்தோஷமாயினேன்.

"வா, பாவி, தாகந் தீர்க்க வா,
தாராளமாகவே
நான் ஜீவத் தண்ணீர் தருவேன்,"
என்றார் என் நாதரே;
அவ்வாறு ஜீவ ஊற்றிலே
நான் பானம் பண்ணினேன்,
என் தாகந் தீர்ந்து பெலனும்
பேர் வாழ்வும் அடைந்தேன்.

"வா, பாவி, இருள் நீங்க வா,
நான் லோக ஜோதியே,
உன் நெஞ்சில் ஒளி வீசுவேன்,"
என்றார் என் நேசரே;
மெஞ்ஞான அருணோதயம்
அவ்வாறு நான் கண்டேன்;
அஜ்ஜோதியில் சந்தோஷமாய்
நான் என்றும் ஜீவிப்பேன்.

III. சிலுவையைத் தெரிந்துகொள்ளல்

"என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது." மத்: 26: 39.

ஆண்டவர் கொடுத்த சிலுவையை மனமடிவோடு அந்த வாலிபன் வாங்கினான். "என் சிலுவையைச் சுமக்கிறவனே எனக்குச் சீஷன் ஆவான்," என்கிற கட்டளைதான் அதைப் பெற்றுக்கொள்ள அவனை நெருக்கி ஏவினது. ஆனால் அவன் சந்தோஷத்தோடு போகாமல் இடையிடையே பெருமூச்சுவிட்டு கீழ் நோக்கி மெல்ல நடந்தான்.

ஆ! இந்த இரட்சிப்பின் வழி எவ்வளவு வருத்தமாய்த் தோன்றுகிறது. கிறிஸ்துவின் தொண்டனாகி இரட்சிப்படைய எனக்கு ஆசையுண்டு. இந்த சுயவெறுப்பில்லாமல் இரட்சிப்படைய இலகுவான வேறே வழியில்லையா? என் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, என் இரட்சகரும் அவர் நீதியுமே என் கதியென்று எண்ணி, இதுவே போதுமென்றிருந்தேன். ஆனால் இப்போது என் சிலுவையைச் சுமக்கவேண்டியதாயிருக்கிறது. அதுவும் இப்படிப்பட்ட சிலுவையா? எவ்வளவு பாரமுள்ளது? என் லேசானவொன்றைக் கொடுக்கவில்லை? என்னுடைய வயதுக்கும் அந்தஸ்துக்கும் விருப்பத்துக்கும் திறமைக்கும் ஏற்ற ஒரு சிலுவையை என் கொடுக்கவில்லை? என் ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமலிருக்க மாட்டேன்; ஆனால் இவ்வளவு பாரமுள்ள சிலுவையின் கஷ்டமில்லாமல் சிலுவை

சுமக்கிறவனுயிருக்கக்கூடும்; நான் லேசான வேறொன்றைத் தேடிக்கொள்வேன், என்று தனக்குள்ளே ஆலோசிக்கலானான்.

நான் மறுபடியும் பார்த்தபோது அந்தச் சீஷன் விதம்விதமான சிலுவைகளைச் சேகரித்து முன் ஆண்டவர் அவனுக்குக் கொடுத்ததைத் தூரத்திவிட்டு அங்கேயிருந்தவைகளிலெல்லாம் சிறியதைத் தெரிந்தெடுத்துக் கொண்டிருந்தான். மறுபடியும் ஆண்டவர் திடீரென்று அவன் பக்கமாகத் தோன்றித் துக்கத்தோடு அவன் செய்கையைப் பார்த்துச் சொன்னதாவது:

"புத்தியீனமான பிள்ளையே, நீ இப்படி சுய இஷ்டமாய் நடக்கலாமா? நான் உனக்குக் கொடுத்த உன் சிலுவை தேவ தீர்மானத்தின்படி உனக்காக ஆயத்தம் பண்ணப்பட்டது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய தேவன் உன் நித்திய வீட்டுக்கு நீ போகும்படி ஆயத்தப்படுத்துவதில் உனக்கு உதவிசெய்ய அதை அனுப்பினார். அளவில்லாத ஞானமும் அன்புமுள்ள தேவன் அந்தச் சிலுவையை உனக்காகத் தெரிந்துகொடுத்தார். உன் சுயபுத்தியினால் அதிலும் மேலான ஒன்றைத் தெரிந்துகொள்ளக்கூடுமென்று நினைக்கிறாயா?"

இதைக் கேட்டு அவன் பேச்சற்றிருந்தான்.

மார்க்க காரியங்களில் தாராளமாய்ச் செலவுசெய்து அதற்கென்று ஊழியம் செய்கிற ஊக்கமும் தயாளமுமுள்ள சீஷர் உண்டு. இவர்களில் சிலர் சாந்தமின்றி முற்கோபிகளாயிருக்கிறார்கள். இவர்கள் பரோபகார

மான ஏற்பாடுகளை ஸ்தாபிப்பதில் சுறுசுறுப்பாயிருக்கிறார்கள். ஆனால் எல்லாவற்றிலும் மேலான சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியைத் தங்களில் நிலைப்படுத்தவேண்டுமென்பதைக் கவனிக்கிறதில்லை. தங்கள் சுபாவத்திலில்லாத பேராசையை அவர்கள் நசுக்கிப் போடக்கூடும். ஆனால் தாங்கள் நிந்திக்கப்படும்போது சகிக்கமாட்டார்கள். உதாரணமாகத் தனக்கு விரோதமாய்த் தப்பிதம் செய்த ஒரு சகோதரனை மன்னிக்கும்படி ஒருவரை வேண்டிக்கொண்டபோது: இல்லை, வேறெந்தக் குற்றத்தையும் மன்னிப்பேன்; இதையோ என்னால் சகிக்க முடியாதென்று அவர் சொன்னாராம்.

சிலர் தங்கள் வேலைக்கடுத்த சோதனைமட்டும் உண்டாகாவிட்டால் கிறிஸ்துவுக்காக எதையும் செய்யத் தயாராயிருக்கிறார்கள். இந்தச் சோதனையைமாத்திரம் வெல்ல அவர்கள் பெரிதென்று நினைக்கிறார்கள். இந்த விதமாக நாம் சிலுவையைத் தெரிந்துகொள்ளுதலோ ஞானமுமல்ல, கீழ்ப்படிதலுமல்ல; சமாதானத்தையும் கொடுக்காது.

தான் மோட்சத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி இன்னும் என்ன செய்யவேண்டும் என்று கற்றுக் கொள்ளக் கிறிஸ்துவினிடத்தில் ஓடிவந்த அந்த ஐசுவரியமுள்ள நியாயாதிபதி செய்த தப்பிதம் இதுதான். ஆண்டவர் அவனுக்கு ஒரு சிலுவையைக் கொடுத்தார். அது அவன் சுமக்க விருப்பமில்லாத சிலுவையாயிருந்தது. தன் சிலுவையைத் தான் தெரிந்துகொள்ளக் கூடாமல்போனதால் துக்கத்தோடு போய்விட்டான்.

ஒருவனுக்குத் தியானஞ்செய்வது அதிக வருத்தமாயிருக்கும். ஆகையால் தன் சுபாவத்திற்கேற்றதாக சுறுசுறுப்பாயிருப்பதைத் தெரிந்து கொள்ளுகிறான். இன்னொருவன் சுறுசுறுப்பாயிருந்து மார்க்கத்துக் கடுத்த காரியங்களில் தன்னை முக்கியஸ்தனாக ஆக்கிக் கொண்டபோதிலும் தனக்குப் பிரியமான ஒரு பாவத்தை விட்டுவிடாமலிருப்பான். தற்பெருமையை நாடி தன் இஷ்டப்படி எல்லாக் காரியங்களையும் செய்வான். அதிக பக்திமானாயிருந்தபோதிலும் அநியாயமாய்ப் பேசலாம். இவ்விதமாகத்தான் அநேக மார்க்க சீர்திருத்தஞ் செய்தோர் இடறலடைந்திருக்கிறார்கள். அதிக வைராக்கியமுடையவர்களாயிருந்தபோதிலும் புறங்கூறலும் வீண்பேச்சும் அவர்களிடத்திலிருக்கலாம். ஒருவனுக்குக் கிறிஸ்துவை ஜனங்களுக்கு முன்பாக அறிக்கையிடவும் தன் குடும்பத்தோடு ஜெபிக்கவும் பிரியமிருந்தாலும் தன் பேராசையையும் பெருமையையும் விட்டுவிட மனதில்லை.

எபே. 6: 12ல் பவுல் சொல்லுகிறபடி துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் நமக்குள்ள போராட்டத்தைக் காட்டுகிற அந்தரங்க ஜெபம் சிலபேருக்கு வெறுப்பாயிருக்கலாம். ஆகையால் அவர்கள் அந்தரங்க ஜெபத்தைப்பார்க்கிலும் கூட்டங்களில் ஜெபிக்கப் பிரியப்படுகிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு இவைகளில் விசேஷித்த ஆத்தும போராட்டம் இல்லை. தங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய மார்க்க சடங்குகளை மாத்திரம் அவர்கள் விரும்புகிறார்கள்.

ஒருவன் ஆண்டவர் தனக்குக் கொடுத்திருக்கிற சிலு வையாகிய தன்னிலைமைக்குரிய வருத்தங்களிலிருந்து பின்வாங்குகிறான். இன்னொருவன் தனக்குப் பிரிய மான வேலைகளை மாத்திரம் ஊக்கமாய்ச் செய்கிறான். தற்பிரியமே எல்லாவற்றிலும் மேலாகக் காணப்படு கிறது.

ஐயா, உமது சித்தம் ஆகிடவே வேணும்
மெய்யாயெனது சித்தம் வெகுமோசமே காணும்;
—ஐயா

ஆடுபோல் வழிதப்பி அவனவன் வழியொப்பி
கேடடைந்தோர் பாவத்தைக் கிறிஸ்துமேல் சுமத்தி
[னீர்,—ஐயா

ஜீவனோ மரணமோ செல்வமோ வறுமையோ
யாவிலெனை நிறுத்த தேவரீர் நினைக்கினும்,— ஐயா

வசையிசை பகை நேசம் வாழ்வுயர் வதிமோசம்
பசி நிருவாணம் நாசம் பாடுநோயடைகினும்,— ஐயா

என்னிஷ்டம் வாயாததால் எத்தனை துயர்கொண்டேன்
பொன்னடிக் கீழடங்கிப் புகழுமக்கென்று வாழ்வேன்
— ஐயா

குயவன்கைக் களிமண்ணாய், குருவேயுமக்கமைவேன்,
நயமிதுவென்றறிந்த ஞானமுள்ள பிதாவே,— ஐயா

IV. சிலுவையின் பாரத்தைக் குறைத்தல்

"கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்தார்கள்." அப். 5: 2.

அவருடைய கடிந்துகொள்ளுதலால் தன்னைத் தாழ்த்தி மனஸ்தாபமடைந்த சீஷன் இரட்சகர் கொடுத்த சிலுவையை மறுபடியும் எடுத்தான். அதை வேண்டாமென்று சொல்லத் துணியவில்லை. என்றாலும் அது பளுவாயும் கரடுமுரடாயுமிருப்பதால் யோசித்தான். பொறுமையோடும் உண்மையோடும் அதைச் சகிப்பதே ஆறுதலடையும் விதம் என்பதை அவன் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. வேலையினால் இளைத்துப்போனவர்களைப் பலப்படுத்துவதும் பலவீனத்தில் பூரணமடைகிறதுமான கிருபையின் வல்லமையை அவன் இன்னும் அறியவில்லை. மாம்சப் பிரகாரமாக யோசித்துக் கடமையைச் சரிப்படுத்தப் பார்த்தான்.

"எனக்குக் கொடுத்த சிலுவைக்குப் பதிலாக வேறொன்றை மாற்றக்கூடாதா? கொஞ்சமாவது இதின் பாரத்தைக் குறைக்கக்கூடாதா? என்னுடைய வருத்தத்தைக் கொஞ்சம் குறைத்தாலும் அவருக்குக் கீழ்ப்படிகிறதாகத்தானேயிருக்கும். இன்னும் அது

என் ஆண்டவருடைய சிலுவையாகவே இருக்கும். (மத். 11:30.) தம்முடைய நுகம் மெதுவாயும் சுமை இலகுவாயுமிருக்குமென்று அவர் வாக்களிக்கவில்லையா?" என்று யோசித்தான்.

அப்படியே அவன் சிலுவையைத் தரையில்வைத்து அதின் நீளத்தைக் குறைக்கும்படி ரம்பத்தால் அறுக்கவும் இழைப்புளியால் இழைக்கவும் பிரயாசப்படுகிறதைப் பார்த்தேன்.

விசேஷித்த பிரயாசையெடுக்கவேண்டிய வேலையை நீ செய்யும்படி அழைக்கப்பட்டால், பின்வாங்கி அதைத் தள்ளிவிடாமல் உன் ஆறுதல் அதிகப்படும்படி உனக்குக் கிடைத்த ஒரு பெரிய சிலாக்கியமென்று அதை மதிப்பாயாக.

ஒரு மனுஷனும் தடுக்கக் கூடாதவைகளிலிருந்து நீ தப்பித்துக் கொள்ளக்கூடுமென்று நினைக்கிறாயா? உலகத்தில் எந்தப் பரிசுத்தவான்கள் சிலுவை சகிக்காமலும் துன்பமடையாமலுமிருந்தார்கள்?

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுங்கூட இந்த உலகத்திலிருந்த காலமெல்லாம் ஒரு மணி நேரங்கூட பாடில்லாமலிருக்கவில்லையே. அவர் தம்

மைப்பற்றி, கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் இவ்விதமாகத் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டுமென்று சொல்லியிருக்க, பரிசுத்த சிலுவையாகிய ராஜபாதையைவிட்டு வேறே வழியை நீ எப்படித் தேடலாம்?



V. சிலுவையை வணங்குதல்.

எசா. 29:13. "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது."

தம்முடைய ஜனங்களின் குருட்டுப் பக்தியை எவ்வளவு பொறுமையோடு ஆண்டவர் சகிக்கிறார்? எவ்வளவு பட்சமாய் அவர் அவர்கள் குற்றங்களைத் திருத்தி அவர்கள் புத்தியீனத்தைக் கடிந்துகொண்டு கீழ்ப்படியும் விதத்தை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்?

தான் கொடுத்த அந்தச் சிலுவையைத் தன் சீஷன் லேசாக்க, அல்லது எவ்விதத்திலும் மாற்ற வீணாய்ப் பிரயாசப்பட்டதிலிருந்து அவனைப் பட்சமாய்க் கண்டித்து விலக்கினார். அவர் கொடுத்தபடியே அவன் சிலுவையைச் சகிக்கவேண்டியது. ஐயோ! தன் மாம்ச பலவீனத்தினாலும் இன்னும் பரிசுத்தமாக்கப்படாத இருதயத்தின் வஞ்சனையினாலும் அந்தச் சீஷன் தன் கடமையைப் புரட்ட வகைதேடுவது எவ்வளவு பரிதாபம்? நான் அவனை மறுபடியும் பார்த்தபோது அந்தச் சிலுவையை ஒரு சிறு மேட்டின்மேல் நாட்டி அதற்கு மாலைசூட்டி அதிகப் பக்தியாய் அதின்முன் தாழ வணங்கிக்கொண்டிருந்தான்.

தவறிப்போன சீஷனிடத்தில் அவர் மறுபடியும் கிட்டப்போய், "இதுதானா நீ எனக்குச் செய்யவேண்டிய ஊழியம்? உன் கடமை சிலுவையைச் சுமக்க

வேண்டியதேயல்லாமல் அதை வணங்குகிறதல்ல; அதைப் புஷ்பத்தைக்கொண்டு அலங்கரிப்பதினால் ஒருவனும் தெய்வீக சுத்தம் அடைய முடியாது; தலையைத் தாழ்த்துகிறதினாலும் முழங்கால் முடக்குகிறதினாலும் உன் உள்ளான ஆவி தாழ்மையாகிறதில்லை; உன் பாவச்சுபாவத்தைச் சிலுவையிலறைந்து பாவ சரீரம் அழிந்துபோகும் பொருட்டாக (ரோ. 6 : 6) உனக்குச் சிலுவை கொடுத்திருக்கிறேன்; உனக்கு வருத்தமில்லாமல் இது நடந்தேறமாட்டாது; ஏனென்றால் நீ சிலுவையின் பாரத்தை உணர்ந்து என்னோடு பாடனுபவிக்கவேண்டும்; இல்லாவிட்டால் உனக்கு என்னிடத்தில் பங்கில்லை;என் பிள்ளையே, நீ உன் சுய இஷ்டத்தைவிட்டு எழுந்திரு;உன் சிலுவையையெடுத்து என் பின்னாலே சுமந்துவா," என்று சொன்னார்.

அநேகர் இன்பமான உணர்ச்சிகளையும் ஆலயத்தில் மனதில் தோன்றுகிறபடி செய்யப்படும் அழகான காரியங்களையும் பயபக்தியென்று தப்பிதமாய்நினைத்து இரட்சிப்பில் காண்பிக்கப்பட்ட தேவகிருபையின் ஆச்சரியத்தை அடிக்கடி வெறும் சுபாவ உணர்ச்சியினால் புகழ்ந்து பேசுகிறார்கள். அநேகர் மெய்யான உணர்ச்சிகளே பயபக்தியென்று நினைக்கிறார்கள்.

கிறிஸ்துவின் குணாதிசயங்களின் மகிமையையும் அவர் மரணத்தின் உன்னதத்தையும் நாஸ்திகர்களுங்கூட எவ்வளவு அலங்காரமாய் வர்ணித்திருக்கிறார்கள். இரட்சகர் தம் சீஷரின் இருதயங்களை ஆண்டுநடத்தும் மேன்மையைப்பற்றி நெப்போலியன் சக்கரவர்த்தி

எவ்வளவு ஆச்சரியத்தோடு பேசியிருக்கிறார்! சிலுவை, பலி, சுயவெறுப்பு, தன்னைத்தான் சிலுவையிலறைதல், என்ற வார்த்தைகளை வணங்கினாலும் அவைகளின் உள்ளான கருத்தை அறியாத எத்தனையோ பேரிருக்கிறார்கள். சிலுவையை ஒரு அலங்காரமாக உபயோகிக்கிறார்கள். தங்கத்தினால் அதை அடித்து நகையைப்போல போட்டுக்கொள்வார்கள். அலங்காரமான மாளிகைகளில் தொங்கும் படங்களிலும், தேவாலயங்களின் கோபுர உச்சிகளிலும் அது வரையப்பட்டிருக்கிறது. பாட்டிலும், வாய்ச் சாதுரியத்திலும் அதின் மேன்மை புகழப்படுகிறது. என்றாலும் இவற்றிற்கும் உண்மையாய்ச் சுவிசேஷப்பிரகாரம் சிலுவையைச் சுமப்பதற்கும், அதாவது தெய்வ கடிந்துகொள்ளுதலைச் சாந்தமாய்ச் சகித்து, வருத்தமான கடமையைத் தாழ்மையாயும் உண்மையாயும் நிறைவேற்றுவதற்கும் எவ்வளவு வித்தியாசம்? பின் சொல்லப்பட்டவைகள்தான் இருதயத்திலுள்ள எல்லாத் தீமைகளையுங் கொன்று நமக்குமுன் சிலுவையைச் சகித்தவர்போல நம்மை ஆக்குகிறது. முன் சொல்லப்பட்டவைகளோ எல்லாத் தீமைகளையும் வளர்த்து பாவவிர்த்தியிலும் மரணத்திலும் முடிகின்றன.

வெளிப்படையாய் என்ன செய்தாலும் தேவசமாதானம் நமக்குக் கிடைக்காது. அது கிடைக்கவேண்டுமானால் தன்னிஷ்டத்தையும் தன்னயத்தையும் பூரணமாக விட்டுவிடவேண்டும். உண்மையும் உத்தமுமான மனஸ்தாபம் சிலுவையின் முன்னிருந்து அழுகிற

திலல்ல; உனக்குப் பிரியமில்லாவிட்டாலும் உன்னிஷ்டத்தைவிட்டு தேவசித்தத்தையே நாடோறும் மணிதோறும் செய்வதே. நம்மைப்பற்றிய சிந்தனையில் முழுவதும் நாம் அமிழ்ந்திருப்பதுதான் நமது குறைகளுக்குக் காரணம்.

ஒரு ராஜ்யத்துக்கு உன்னை நடத்தும் சிலுவையை எடுத்துக்கொள்ள நீ ஏன் பயப்படுகிறாய்? சிலுவையில் இரட்சிப்பும் ஜீவனும் சத்துருவினிடத்தில் அகப்படாமல் பராமரிப்பும் பரலோக ஆனந்தத்தின் ருசியும் மனோபலமும் ஆவியின் சந்தோஷமும் பூரண நற்குணமும் பூரண பரிசுத்தமுமுண்டு. சிலுவையல்லாமல் ஆத்துமாவுக்கு இரட்சிப்புமில்லை. நித்திய ஜீவனின் நம்பிக்கையுமில்லை. ஆகையால் உன் சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவுக்குப் பின்சென்றால் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பாய். நீயும் உன் சிலுவையைச் சுமந்து சிலுவையில் அவருடன் மரிக்க விரும்பும்படி உனக்கு முந்தி அவர் தன் சிலுவையைச் சுமந்து அதில் மரணமடைந்திருக்கிறார்.

நீ அவரோடு மரித்தால் அவரோடு ஜீவனோடிருப்பாய்; அவரோடு பாடனுபவித்தால் அவருடைய மகிமையில் உனக்குப் பங்கு கிடைக்கும்.

தீய மனதை மாற்றவாரும், தூய ஆவியே,—கன
நேய மேவியே.

மாய பாசத் தழுந்தி, வாடி, மாளும் சாவிதால்;— மிக
மாயும் பாவி நான்— தீய

பரத்தை நோக்க மனம் அற்றேனே, பதடிதான்
ஐயா;—ஒரு
பாவி நான் ஐயா— தீய
கிறிஸ்து மீது நாட்டம் கொண்டு, கீதம் பாடவே,—
அவர்
கிருபை தேடவே— தீய

RUDD SC.

VI. சிலுவை சுமக்க வெட்கப்படல்

மாற்கு 8: 38. "விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுகூட வரும்போது வெட்கப்படுவார்."

சீஷன் தான் வணங்கும்படி வைத்திருந்த இடத்திலிருந்து சிலுவையை எடுத்துத் தன் ஆண்டவர் சொன்னபிரகாரம் சுமக்கிறதற்குப் பிரயாசப்படுகிறதாக மறுபடியும் பார்த்தேன். ஆனால் பக்கத்தில் நின்ற சிலர் அவனை இகழ்ச்சியாய்ப் பார்த்ததை அவன் கண்டு அவர்களுடைய நிந்தனையைப் பொறுக்கமாட்டாமல் சிலுவையைத் தனக்குப் பின்னாலே தள்ளி, கயிற்றால் அதைக் கட்டித் தரையில் இழுத்தான்.

இன்னும் தன்னையும் மறைத்துக்கொள்ளும்படி முக்காடிட்டு வேஷமாறி அவன் போய்க்கொண்டிருக்கும்போது ஆண்டவர் அவன் அருகே போய் அவன் முக்காட்டை நீக்கிச் சொல்லுகிறதாவது: "என்னையும் என் சிலுவையையும்பற்றியா நீ வெட்கப்படுகிறாய்? நான் பிலாத்துவுக்குமுன் நின்றதும் அப்போது என்னைப் பகைத்தவர்கள் பரியாசமாக ராஜ அங்கியை எனக்குத் தரிப்பித்து, முட்கிரீடத்தை எனக்குச் சூட்டி, 'யூதருடைய ராஜாவே! வாழ்க,' (மாற்கு 15: 18) என்று இழிவாய்ச் சொன்னதும் சிலுவையில் இரண்டு கள்ளருக்கு மத்தியில் உனக்காகத் தொங்குகிறபோது

அந்த வழியாய் நடந்துபோனவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி என்னைத் தூஷித்த காட்சியும் உன் ஞாபகத்தில் இல்லையா? சிலுவையின் வெட்கத்தையும் பாராமல் உனக்காக அதைச் சகித்தேன். தேவதூதர்களோடும், நான் இரட்சித்தவர்களைப்பற்றிப் பேசி அவர்களை என் சகோதரரென்று சொல்ல நான் வெட்கப்படவில்லை. இதுதானா நான் உனக்காகச் செய்தவைகளுக்குப் பிரதிபலன்?"

சிலுவையினால் ஒருவன் வெட்கப்பட்டுப்போவானா? வெட்கமான சிலுவை மரத்தைப்பற்றிப் பேசுகிறதில்லை; ஏனென்றால் தற்காலத்தில் அது கனமான ஒரு அடையாளமாக எண்ணப்படுகிறது. இந்த ஏழைச் சீஷன் முக்காடிட்டுத் தன் இரட்சிப்பின் சின்னத்தை மறைக்கிறதை எத்தனைபேர் ஆச்சரியத்தோடு பார்ப்பார்கள்? என்றாலும் அவர்களும் அதையே வேறு விதமாகச் செய்கிறார்கள்.

சிலர் கிறிஸ்துவின் கொள்கைகளைக்குறித்து வெட்கப்படுகிறார்கள். மனுஷரின் சுபாவக் குருட்டாட்டத்தையும் அறிவீனத்தையும் கெட்ட குணத்தையும் இவற்றை மாற்றத் தெய்வீகப் புதுப்பித்தல் அவசியம் என்பதையும் கிருபையினால் மாத்திரம் இரட்சிப்புண்டாகுமென்பதையும் வெளிப்படுத்துகிற வேதத்தை அவர்களுக்கு ஏற்றுக்கொள்ள விருப்பமில்லை. அவர்கள் கிறிஸ்து மார்க்கம் என்ற பதத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் கிறிஸ்து மார்க்கத்துக்குரிய பாவநிவிர்த்தி, மறுஜென்மம், பரிசுத்தம் முதலியவைகளை அவர்கள் கவனிக்கிறதில்லை.

இன்னும் சிலர் கிறிஸ்துவின் கட்டளைகளைக்குறித்து வெட்கப்படுகிறார்கள். தங்கள் சிநேகிதர் மத்தியிலும் பள்ளிக்கூடத்திலும் தங்கள் ஊரிலும் தாழ்மையாயிருப்பது புருஷத் தன்மையல்லவென்றும், இழிவான குணமென்றும், தேவன் கொடுக்கிற வறுமையை ஏற்றுக்கொள்வது சுறுசுறுப்புக்கடுத்ததல்லவென்றும், சத்துருவை நேசித்தல் கோழைத்தனமென்றும் நினைக்கிறார்கள். உத்தம மனஸ்தாபத்தினாலுண்டாகும் சாந்தமான நற்குணங்களில் அவர்கள் பிரியப்படுகிறதில்லை. தேவனால் புகழப்படுகிறதைப்பார்க்கிலும் மனுஷருடைய புகழையே அதிகமாய் விரும்புகிறார்கள்.

தரி—தாழ்மையே தெரிந்து—வெறு
தாட்டிகமதை உரிந்து (1 பே. 5: 5).

திரித்துவத் தொருவராம் கிறிஸ்தேசு
செயலதை நீ குறி, மனமே;—அவர்
தரித்திரனிகராய் இகத்தில் உற்பவமாய்த்
தாழ்ந்திருந்தார் அனுதினமே (பிலி. 2: 5-8).— தரி

மனத்தரித்திரர் தாம் பாக்கியரெனவே
வாகுடன் அவர் உரைத்தாரே,—நெஞ்சே,
உனக்குள் இத்தகமையான நற்குணமே
உண்டோ என்றாய்ந்து நீ பாரே (மத். 5: 3).— தரி

மேட்டிமை யுடையோர் மீது தற்பரனார்
வெறுப்படைந் தகற்றுவார் உடனே;—நல்ல
தாட்டிகமதிலாத் தாழ்ந்த சிந்தையினோர்
தமக்கருள் புரிகுவர் திடனே (யாக். 4: 6).— தரி



VII சிலுவையைக்குறித்து மேன்மைபாராட்டுதல்

மத். 6: 16. "அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாகத் தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்."

வெட்கமும் பயமுமுள்ள இழிவான நிலைமையிலிருந்து அதற்கு நேர்விரோதமும், அதைப்போல குற்றமுள்ளதுமான நிலைமையை அடைவது நம்முடைய வாலிபப் பிரயாணிக்கு அதிக லேசாய்த் தோன்றிற்று. அவன் சிலுவை சுமப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் இன்னும் அங்கேயிருந்தார்கள். அவனை முழுவதும் ஆண்டுகொண்ட எண்ணம் உலகத்தவர் என்ன சொல்லுவார்கள் என்பதுதான். தன் சிலுவையையும் முகத்தையும் அவர்களிடமிருந்து மறைக்கக்கூடாததால் அவர்கள் பார்க்க ஆடம்பரத்தோடு சிலுவையைத் தூக்கிக்காட்டித் தன்னுடைய வைராக்கியத்தையும் தைரியத்தையுங்குறித்து ஆச்சரியப்பட்ட அவர்களைக் கூப்பிட்டான். கொஞ்ச நேரத்துக்கு முன் தனக்கு வெட்கமாகத் தோன்றின சிலுவை இப்போ அவனுக்குப் பெருமையாகிவிட்டது.

இவ்விதமாகத் தற்பெருமை கொண்டிருக்கும்போது தன் தோளை மெதுவாய் ஒருவர் தட்டுகிறதைக் கண்டான். அப்போ கண்டிப்பும் விசனமுமுள்ள ஓர் சத்தங் கேட்டேன். அதாவது: (மத். 6: 1) 'மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக இதைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். செய்தால்

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.'

பெருமை எவ்வளவு தந்திரமுள்ளதென்றும் சகல விதப் பாவங்களும் அதிலிருந்து லேசாய் உண்டாகு மென்பதும் அநேகருக்குத் தெரியாது. ஒருவன் பிர யாசப்பட்டுத் தன் லோப குணத்தை மேற்கொண்டதி னால் பிறகு தன் தயாளத்தைக்குறித்து வீண்பெருமை கொள்ளுகிறவனுகிவிடலாம். ஒருவன் சிலுவையினு லுண்டாகும் வெட்கத்தை விட்டுவிட்டுத் தன் தைரி யத்தைக்குறித்துப் பெருமைபாராட்டுகிருன். தன் னைத்தான் சிலுவையிலறைகிறது, அதினுலுண்டாகும் நோவு, அதில் காண்பித்த தைரியம், பெற்ற சித்தி இவைகளையுங்கூட ஒருவன் அதிகத் தற்பெருமையாய் எடுத்துப் பேசலாம்.

சிலவேளைகளில் ஒரு சீஷன் தன் சிலுவையை மற்ற வர்கள் பார்க்க டம்பமாகக் காட்டுகிருன். தனக்குள் ளேயும் அப்படியே யோசிக்கிருன். தேவாலயத்தில் நின்று தான் நிறைவேற்றின விரதங்களையும் செலுத் தின தசமபாகங்களையும் தேவனுக்கு எடுத்துரைத்த பரிசேயனைப்போல தேவசமுகத்திலும் அவன் ஒரு வேளை இதைக்குறித்துப் பெருமையாய்ப் பேசலாம்.

இப்படிச் செய்வது பவுல் அப்போஸ்தலன் சொல்லு கிற சிலுவையைக்குறித்து மேன்மைபாராட்டுதல் அல்ல. அவன் கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்து மேன்மைபாராட்டலைச் சொல்லுகிருன். இதுவோ தன் சிலுவையைப்பற்றியதாயிருக்கிறது. கிறிஸ்துவின்

சிலுவையைக்குறித்து மேன்மைபாராட்டல் அருமை இரட்சகரின் கிரியையிலும் மனிதனுக்கென்று அவர் நிறைவேற்றின பாவ நிவாரணத்திலும் அதினுலுண்டாகிற சத்தியத்திலும் நம்முடைய கடமையிலும் நமக்குண்டாகிற சந்தோஷத்தைக் காட்டுகிறது. அது அவருடைய ஊழியத்திலும் அவருக்காக எல்லாவற்றையும் விட்டுவிடும் சலாக்கியத்திலும் சிலுவையிலறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் அறியாதிருப்பதிலும் (1 கொரி. 2: 2) நமக்கு இன்பம் கொடுக்கிறது.

தம் ஞானத்தில் பெருமை பாராட்டுகிறவர்கள் இதைப் பயித்தியமென்பார்கள். இந்த உலகத்தின் ஐசுவரியவான்களும் பெரியோரும் கிறிஸ்துவின் சிலுவையில் மேன்மைபாராட்டுகிறவர்களை (1கொரி. 4:13) எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போல எண்ணுவார்கள். ஆனல் உத்தம விசுவாசிக்கோ இந்தச் சிலுவையின் மேன்மை (1 கொரி. 1:24) தேவ பலமும் தேவ ஞானமுமாயிருக்கிறது. தன் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுதலோ கிறிஸ்துவையல்ல சீஷனையே மகிமைப்படுத்துகிறது. உலகத்துக்குமட்டும் செத்ததாகவல்ல தன் சிலுவைக்கும் செத்த உத்தமத் தாழ்மையைக் காத்துக்கொள்வது எவ்வளவு வருத்தம்!

VIII. சிலுவையைத்தன் இஷ்டப்படி சுமக்குதல்

"தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப்பின் பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல." மத். 10:38.

இன்னும் அந்தச் சீஷன் என்ன செய்கிறானென்று பார்ப்போம். இவ்வளவு கீழ்ப்படியாமைக்கும் இத்தனை சீர்திருத்தங்களுக்கும் பிற்பாடாவது ஆண்டவரின் சித்தத்தின்படி இந்தச் சீஷன் சரியாய்ச் செய்யக்கூடாதா? இன்னும் முடியாதென்றே தோன்றுகிறது. கீழ்ப்படிதலைச் சரியாய்ப் படிப்பிக்குமுன் அநேகவிதமான வீணான அனுபோகங்களைப் பரீட்சித்துப் பார்க்கவேண்டியதிருக்கிறது (மாற். 10:21). "சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா," என்பதே ஆண்டவரின் கட்டளை. ஆண்டவர் அவனைக் கடைசியாகக் கண்டித்தபிற்பாடு சிலுவையை மேலான தானத்திலிருந்து இறக்கி அது இருக்கவேண்டிய இடமாகிய தோளின்மேல் வைத்திருக்க நான் பார்த்தேன்.

நம்முடைய முன்மாதிரியாகிய கிறிஸ்துவை நோக்கிப்பார்க்காமல் அவன் தன் முகத்தைத் திருப்பித் தன் கடமையைச் சரிவர நிறைவேற்றுகிறேனென்கிற மனரம்மியம் உள்ளவனாயிருந்தான்.

மறுபடியும் துக்கத்தோடும் அனுதாபத்தோடும் ஆண்டவர் அவனண்டை போகப்பார்த்தேன். அந்தச் சீஷனைத் திரும்பத் திரும்ப அவர் கண்டித்தாகிவிட்டது. அவன் கீழ்ப்படியாமையைப் பொறுமையோடு சகித்து அவனுக்குக் கடமை இன்னதென்பதைச் சாந்தத்தோடு

கற்றுக்கொடுத்துவந்தும் இன்னுமொருதரம் தன் மந்தமுள்ள சீஷனைக் கண்டித்துப் பேசவேண்டியதிருந்தது.

இன்னும் பூராவாகக் கீழ்ப்படியமாட்டேன் என்கிறாயா? என் பிள்ளையே நான் உனக்குக்கொடுத்த சிலுவையைச் சகித்து என்னைப் பின்பற்றிவா என்று கட்டளையிடவில்லையா? என் முன்மாதிரியால் ஜீவவழியை உனக்குக் காட்டுகிறேன். வீணை இந்த உலகத்தில் நான் போனவழியைத்தவிர சமாதானமும் மகிமையும் அடைவதற்கு வேறே வழி இல்லையென்று கோபமில்லாமல் உருக்கத்தோடு சொன்னார்.

தங்கள் சிலுவையைச் சுமந்தும் ஆண்டவரைப் பின்பற்றாதவர்கள் எத்தனை பேரிருக்கிறார்கள். நம்முடைய ஆண்டவர் நியமிக்காத சுயவெறுப்புகளைத் தங்களுக்காக உண்டாக்கி, “சுய இஷ்டமான ஆராதனையையும் மாயமான தாழ்மையையும் சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும்” (கொலோ. 2: 23), என்கிறபடி அநேக காரியங்களைச் செய்தும் எவ்விதத்திலும் கிறிஸ்துவை ஒத்திருக்காத சந்நியாசிகள் கன்னியாஸ்திரீகளின் கூட்டமாத்திரமல்ல, இவ் வீண்பக்தியில்லாத திரள் ஜனத்தாருங்கூட அதே ஆவியைக் காண்பிக்கிறார்கள். அவர்கள் சந்தோஷமில்லாத கடமையைச் செய்து தங்கள் மாமிசத்தைச் சிலுவையிலறைந்தபோதிலுங்கூட தங்கள் இஷ்டத்தைத்தான் நிறைவேற்றிவருகிறார்கள்.

அநேகர் கிறிஸ்துவினால் தாங்கள் நன்மையடையலாமென்ற நம்பிக்கைக்காகவே சிலுவையைச்சகித்து அந்த

நம்பிக்கையை மற்றவர்களுக்குமுன்பாக அறிக்கையுமிடு வார்கள். அந்த நம்பிக்கை கிடைப்பதற்காக அவசரமானுல் உலக ஆடம்பரத்தையும் பெருமையையும் விட்டுவிடுவார்கள். திருச்சபையோடு ஐக்கியப்படுவதற்காகஇன்னும் சிலவற்றையும் விட்டுவிடுவார்கள். அவர்கள் செய்வது இம்மட்டுந்தான். வேருென்றையும் செய்யார்கள். அதிலிருந்து தங்கள் வழிகாட்டியும் முன்மாதிரியுமான ஆண்டவரை விட்டு விலகிப்போகிருர்கள். ஏனென்ருல் தங்கள் வாயிஞல் மாத்திரம் மார்க்கத்தை அனுசரித்து அதின்படி தங்கள்ஜீவியத்தை நடத்துகிறதில்லே. சிலுவையை எடுத்துக்கொள்ளுகிருர்கள். கிறிஸ்துவையோ பின்பற்றுகிறதில்லே. அவருடைய கட்டளைக்குக் கீழடங்கி அவருடைய ஆவியைப்பெற்று, தங்களுடைய நிலைமையில் அவரிருந்தால் என்ன செய்வார் என்று கவனித்து, தங்களை வெறுத்து அவருக்குப் பின்செல்லுவதுதான். பக்திக்குரிய ஜீவியமென்பது கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற சிலருடைய எண்ணத்தில் படவில்லே. இனி மோட்சத்துக்குப் போவது மாத்திரமல்ல இவ்வுலகத்திலேயே கிறிஸ்துவை நம்முடைய சிநேகிதராகவும் வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் வைத்துக்கொள்ளும் சந்தோஷம் இரட்சிப்பு என்பதை அவர்கள் மறந்துவிடுகிருர்கள். சிலுவையை எடுப்பது அவசியமான காரியந்தான். ஆனுல் அதோடு நம்முடையகடமை முடிந்துபோகிறதில்லே. சிலுவையை எடுப்பதினுல் இரட்சகரைப் பின்பற்றவிடாமல் நம்மைத் தடுக்கிற அநேக தடைகள் நீங்குகின்றன. ஆனுல்

மெய் ஜீவியத்தைக் கொடுக்கக்கூடிய வேலை உண்மையாய் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடந்து அவர் ஆவியைப்பெற்று அவருக்கு ஊழியஞ்செய்து குணத்திலும் ஜீவியத்திலும் அவரைப்போலாகுவதே.

திருச்சபையில் ஒரு அங்கம் உலகத்தானுயிருக்கிறுனென்று வைத்துக்கொள்ளுவோம். அறிக்கையிடுவதே அவனுக்குச் சிலுவையாயிருக்கிறது. ஏனென்றால் அப்பேர்ப்பட்டவர்களுக்கு அறிக்கை செய்வதும் தன்னிஷ்டப்படிசெய்யாமலிருப்பதும் திருச்சபைக்குரிய கடமைகளும் அதிக வருத்தமாயிருக்கிறது. அவன் தெரிந்துகொண்ட சிலுவை கிறிஸ்துவைப் பின்பற்றச்செய்யாமல் அவரைவிட்டு விலகும்படி செய்கிறது. கிறிஸ்து உலகமகிமையும் உலகத்தாருடைய நயவும் தன்னயமுள்ள உலக சந்தோஷங்களுமான காரியங்களைத் தேடாமல் மேலான காரியங்களை விரும்பினுர். அநேக புண்ணியங்களைச் செய்வதல்ல, மேலான ஆவிக்குரிய நற்குணத்தை அடைவதே சிலுவையை உண்மையாய்ச் சகிப்பது.

அவர்கள் கிறிஸ்து சபையின் சடங்காசாரங்களைக் கவனமாய்க் கைக்கொண்டபோதிலும் சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் கிறிஸ்துவினிடத்திலிருந்து கற்றுக்கொள்ள ஒரு பிரயாசமும் எடுக்கிறதில்லை.

முதலாவது உள்ளான ஆவியோடும் பிற்பாடு வெளியரங்கத்திலும் கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டும். முதலாவதுநாம் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும்

நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயுமிருக்கவேண்டும் (2 கொரி. 10 : 5). மனவருத்தத்தோடு செய்யும் எந்த வெளிப்படையான சடங்கும் கிறிஸ்துவின் சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்பதற்குப் பதிலாகமாட்டாது. இந்த ஐக்கியம் அவருடைய குணாதிசயங்களையும் உபதேசங்களையும்பற்றிக் கவலையோடு தியானிப்பதாலேதான் உண்டாகும். இவ்விதத் தியானம் உலக முயற்சியுள்ள நம்முடைய காலத்தில் அதிகக் குறைவாயிருக்கிறது. எல்லாக் காரியங்களிலும் நம்முடைய ஜீவியத்தின் எல்லா நடபடிக்கையிலும் இடைவிடாமல் கிறிஸ்துவை நுட்பமாய்ப் பின்பற்றவேண்டுமானால் நம்முடைய மனதில் அவருடைய விசேஷித்த ஆவியைப் பற்றிய மிகவும் தெளிவான எண்ணமும் இருதயத்தில் அந்த ஆவியின் அன்பையும் பாக்கியத்தையும்பற்றிய உணர்வும் இருக்கவேண்டும்.

அநேக காரியங்களை நாம் செய்கிறவிதம் நமக்குப் பூரண கீழ்ப்படிதலில்லையென்று காட்டுகிறது. உலகத்துக்கடுத்த பிரகாரமாகவும் பரத்துக்கடுத்த பிரகாரமாகவுமுள்ள வறுமையை நீக்கும்படி வறுமையிலுள்ளவர்களுக்கு நம்முடைய பணத்திலிருந்து கொடுப்பது நம்முடைய கடமைதான். ஆனால் நாம் நம்முடைய விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய பணங்களை மற்றவர்களுக்குக் கொடுத்தபோதிலும் கிறிஸ்துவாகிய நம்முடைய எஜமான் அவைகளைச்செய்கிறபிரகாரஞ்செய்யாதிருக்கக்கூடும். அவர் உற்சாகமாய்க் கொடுக்கிறவராயி

ருந்தார். தன் ஜீவனையும் மனதார நமக்காகக் கொடுக்கச் சித்தமானார். நம்முடைய நிலைமைக்குத் தகுந்தபிரகாரம் நாம் கொடாதிருக்கும்போதும் முறுமுறுப்போடும் பெருமையோடும் இரக்கமில்லாமலும் கொடுக்கும்போதும் நாம் அவரைப் பின்பற்றவில்லை. "பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்," என்பது தேவ கட்டளை (எசா. 58: 10).

மனஸ்தாபப்படுகிற தன் சகோதரனுக்கு மன்னிக்கிறதினால் தன் பெருமையை ஒருவன் சிலுவையிலறையலாம். என்றாலும் கிறிஸ்து அவனை நேசிப்பதுபோல நேசிக்கமாட்டான். நமக்குப் பிரியமில்லாதவர்களைக் கோபமூட்டாதபடி நம்முடைய ரோசத்தை அடக்கிக் கொண்டபோதிலும் கிறிஸ்து தம் சத்துருக்களைநேசித்ததுபோல நாம் அவர்களில் அன்புகூரமாட்டோம். அவருடைய கட்டளைகளை முழுமனச்சாட்சியோடு நாம் கைக்கொண்டபோதிலும் பிறரைப் பழித்துப் புறங்கூறி சண்டை வருவிப்பதினால் நாம் மற்றவர்களுக்குத் தீங்கு உண்டாக்கலாம். ஆனாலவரைப் பின்பற்றினால் நாம் எப்போதும் நன்மை செய்கிறவர்களாகச் சுற்றித்திரிவோம்.

ஒருவன் அந்தரங்க ஜெபம் செய்கிறான். அநேககாரியங்கள் அவனை அப்படிச் செய்யாதபடி கெடுக்கிறது. அந்தக் காரியங்களினால் அந்தரங்க ஜெபம்அவனுக்குச் சிலுவையாயிருக்கலாம். என்றாலும் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்த அவரைப் பின்பற்றவில்லை (எபி. 5: 7). அவர்

விண்ணப்பம்பண்ணுவதில் அதிக ஊக்கமுள்ளவராயி ருந்தார். ஸ்தோத்திரம் செலுத்துவதிலும் அதிக உற்சாகமாயிருந்தார்.

ஒருவன் தன் வீட்டில் தனிஜெபம் பண்ணலாம். தன் குடும்பத்தோடு ஜெபம்பண்ணமாட்டான். ஆனால் கிறிஸ்துவோ தனிமையாக மாத்திரமல்ல, எப்போதும் தன் சிறு குடும்பத்தோடும் ஜெபம் செய்தார்.

சிலுவையைச் சுமப்பதும் கிறிஸ்துவைப் பின்பற்று வதும் அவசியமானாலும் பின்பற்றுவதே பிரதானம்.

பொய்யாம் உலக உல்லாசத்தினால் மனம் போன
வழி நடந்தேன்,—ஏ

சையா, அபையம்! அபையம்! இரங்கும், மேசையா,
என் தாதாவே.

அறிவிலாதொரு மிருகமாக நான் அலைந்த பாதகன்
ஆயினும்,

அருமை ரட்சகனே, திருமனம் உருகுமே, மிக உரு
குமே;

மறுதலித்த பேதுருவைக் கைவிட மனதுவந்ததும்
உண்டுமோ?

மகதலாமரி யாளின்மேல் அருள் வைத்தவா, உனின்
சித்தமே.

ஐயிருபது ஆட்டினில் ஒன்
றகன்றிட்டால், மனம் உகந்து கோன் அதை
மெய்யதாகவே தேடுவான் என்ற
மேய்ப்பரே, எனைச் சேர்த்திடும்.

மேய்ப்பன் மந்தையை விலக்கின ஆட்டை
வெகு கவலையாய்த் தேடிக் கண்டபின்
வாய்ப்புடன் மனம் மகிழும் போலே
மானுவேலுனைத் தழுவலாலே.



சிலுவையைக் கிறிஸ்துவின்பின் சுமக்குதல்.

IX. சிலுவையைக் கிறிஸ்துவின்பின் சுமக்குதல்.

நான் திரும்பவும் பார்த்தேன். இந்த ஏழைச் சீஷனின் முகம் எவ்வளவு வித்தியாசமாக இருந்தது. அவனுடைய கோழைத்தனம், கீழ்ப்படியாமை, தன்னம்பிக்கை, பெருமை எல்லாவற்றின்மேலும் அவன் ஜெயங்கொண்டதாகத் தோன்றினது. மறுபடியும் சிலுவை சுமக்கும் ஆண்டவர் தாழ்மைக்கு அடையாளமான சிலுவையை அவனுக்குக் கொடுத்தார். அவன் முன்போல மாறுத்தரம் ஒன்றும் இப்போ சொல்லவில்லை. சாந்தத்தோடு பாடனுபவித்த ஆண்டவர்தாமே அவன் தோளின்மேல் சிலுவையை வைத்தபோது (அப். 9: 6), "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்," "என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக். 22:42), என்று சாந்தமாய்ச் சொன்னான்.

அதிகப்பெரியதும் கனமுள்ளதும் கரடுமுரடானதுமான சிலுவையைத் தெரிந்தெடுத்து ஆண்டவர் தன் சீஷனுக்குக் கொடுக்க நான் பார்த்தேன். அப்படிக் கொடுக்கும்போது, "எனக்காக விசேஷித்த ஊழியஞ் செய்து என் ராஜ்யத்தில் நீயும் பாடனுபவிக்கும் கனத்தை அடைய நான் சித்தங்கொண்டிருக்கிறேன்," என்று சொன்னார்.

துன்பமும் வெட்கமும் உண்டாக்கும் சிலுவையைக் கிறிஸ்துவின் திருக்கரங்களிலிருந்து உடனே நன்றியறிதலோடு அவன் பெற்றுக்கொண்டதைப்பார்க்க அதிகச்

சந்தோஷமாயிருந்தது. தடையுமில்லை; தாமதமுமில்லை; மாமசத்தோடும் இரத்தத்தோடும் ஆலோசனைபண்ண வுமில்லை; வருங்காரியங்களைக்குறித்து நம்பிக்கையற்ற எண்ணமுமில்லை. பொக்கிஷத்தைப்போல அதை மார்போடு அணைத்துக்கொண்டான் அவன் பயப்படவு மில்லை; அதைக்குறித்து வெட்கப்படவுமில்லை.

அந்தச்சீஷனில் காணப்பட்ட பெரியமாறுதலை நான் பார்த்தபோது தூரதேசங்களில் நடந்தசம்பவங்கள்என் ஞாபகத்தில் வந்தது எங்கும் ஒரு வாலிப யூதசாஸ்திரி தான் என் கண்களுக்குத் தோன்றினான். எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும பார்த்தாலும் அவன் ஜீவியம் முழுதும் கிறிஸ்துவுக்குத் தத்தம் செய்யப்பட்டதாகவே யிருந்தது. ஆண்டவர் சித்தத்தின்படி எப்போதும் செய்து அதின்படி பாடுபட்டு பொறுமையும் கீழ்ப்படிதலும் உள்ளவனாய்க் காணப்பட்டான். எல்லாக் காரியங்களிலும்அவன் ஆண்டவரின்சித்தத்தின்படி செய்ய அல்லது சகிக்கக்கூடியவனாயிருந்தான். ஒருதரம் நான் ரோமைச் சிறைச்சாலையொன்றிற்குள் போனதாகத் தோன்றினது. அவன் கையில் விலங்குமாட்டிக் குட்டையிலடைக்கப்பட்டு, கற்பாவின தரையில் உட்கார்ந்திருந்தான். இந்த நிலைமைக்கு வரவேண்டிய காரணமென்னவென்று அவனைக் கேட்டபோது கிறிஸ்துவைப் பின்பற்றிச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததற்காக என்று மாறுத்தரம் சொன்னான். சிலுவையை உண்மையாய்ச் சகிப்பது இதுதான்.

இந்த வருத்தமான நிலைமையைக்குறித்து அழுது

கொண்டிருந்தானு? இல்லை. உபத்திரவத்தில் பொறுமையாயிருந்து (ரோ. 12: 12) கடவுளை அவர் செய்த நன்மைக்காகவும் அவருடைய உண்மைக்காகவும் ஸ்தோத்திரித்துக்கொண்டிருந்தான். இதற்குப்பிற்பாடு மத்தியதரைக் கடலின் மத்தியில் இருந்ததாகக் கண்டேன். கொந்தளிக்கும் அலைகளினூடே ஒருவரும் அறியாத தீவில் அவன் விழுந்துகிடந்தான். இதுவும் கிறிஸ்துவுக்காகத்தானென்று அறிந்தேன். அங்கேயும் அவ்விதப் பொறுமையையும் கீழ்ப்படிதலையும் காட்டினுன். மறுபடியும் இரத்தம் பீறிட அவனுடைய வெறும் முதுகில் ஒரு முரடன் சவுக்கினுல் அடிக்கப் பார்த்தேன். இதுவும் கிறிஸ்துவைப் பின்பற்றினதினுல் தான். அவன் கிறிஸ்துவின் ஊழியத்தில் இளைப்படையவில்லை. கோட்டையிலுள்ள கோபமூண்ட ஜனக்கூட்டத்தின் மத்தியிலும் ரோமச்சேனுபதியின் நியாயஸ்தலத்திலும் அத்தேனேபட்டணத்துத் தத்துவசாஸ்திரிகளுக்கு முன்பாகவும் அவ்விதப் பொறுமையுள்ளவனுகத் தானிருந்தான். எப்போதும் தனக்குக் கொடுக்கப்பட்ட சிலுவையைக் கிறிஸ்துவுக்குப்பின்னுல் சுமந்துகொண்டிருந்தான். ஆதிமுதல் அந்தம்வரை பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படிந்தவனுயிருந்தான் (அப். 26: 19).

கிறிஸ்துவின் ஊழியத்தைக் கஷ்டமானதாகத்தான் இருக்கக்கண்டான். ஆனுலும் அதற்குப்பதிலாக மற்றென்றையும் மாற்ற அவனுக்கு இஷ்டமில்லை.

ஆ! இதுதான் உண்மையாய்ச்சிலுவைசுமப்பதுஎன்று எண்ணிக்கொண்டேன். அது நம்முடைய சிலுவை

யாயிருக்கவேண்டுமேயொழிய இன்னொருவனுடைய சிலுவையாயிருக்கப்படாது. அது அந்தப் பேர்போன சிலுவை சுமப்போர் எவ்வளவு பெரிதாகவும் கரடு முரடானதாகவும் கனமுள்ளதாகவும் தெரிந்துகொள் ளுகிறாரோ அவ்வளவுக்கு இருக்கவேண்டும். அதைச் சுமக்கவேண்டுமேயொழிய வணங்கவாவது குறைக்க வாவது மறைக்கவாவது டம்பமாக வெளிக்குக் காட்ட வாவது கூடாது. கிறிஸ்து சுமந்தபிரகாரம் கடைசி பரியந்தம் சுமக்கவேண்டும். முடிவுபரியந்தம் நிலைநிற் பவனே இரட்சிக்கப்படுவான்.

கிறிஸ்து நமக்கு ஆண்டவராயும் தலைவராயும் இருக்க வேண்டும். அவர் முன்மாதிரியையும் வார்த்தையையும் என்ன நஷ்டம் வந்தாலும் என்ன நேரிட்டாலும் பின்பற்றவேண்டும். நம்மை நாமே சிலுவையிலறைந்து பின்பற்றத் துவக்கவேண்டும்.

நமக்கு வரும் இன்பதுன்பங்களைக்குறித்து எண்ணக் கூடாது. உலகம் நமக்கும் நாம் உலகத்துக்கும் சிலு வையிலறையப்படவேண்டும். பவுலப்போஸ்தலனின் ஜீவியத்தின் கஷ்டகாலங்களை யோசிக்கும்போது ஒரு கேள்வி இயல்பாய் நமக்குண்டாகிறது. அதாவது: அவ னுக்குண்டாகும் அல்லது கிடைக்கும் எல்லா உலக சலாக்கியங்களையும் அந்தஸ்தையும் அவர்காலத்து ஞானி களோடும் கல்விமான்களோடும் சம்பாஷிக்கும் சம்பா ஷணையையும் வெறுத்துத் தள்ளவேண்டிய அவசரமி ருந்ததா? இரத்தச்சாட்சிகளின் சரித்திரத்தை நாம் கவ னிக்கும்போதும் இப்பேர்ப்பட்ட கேள்வி அவசரமா

கத் தோன்றுகிறது. உபத்திரவத்தினால் பூரணப்பட்ட (எபி. 2:10) நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய கிறிஸ்துவைப் பின்பற்றின ஆதித்திருச்சபையை நாம் பார்க்கும்போதும், ரோமைச்சக்கரவர்த்திகளினாலுண்டான துன்பத்தினால் கண்ணீரும் இரத்தமுமே சிந்தப் படவேண்டியிருந்த காலங்களின் சரித்திரத்தையும் பார்க்கும்போதும் எவ்வளவு ஆச்சரியமானதாயிருக்கிறது. ஆனால் இவைகளெல்லாம் அவசரந்தான். ஏனென்றால் அநேக உபத்திரவங்களின்வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும் (அப். 14:22).

பரிசுத்தமுள்ள இரட்சகருக்கு அது அவசியமானால் அவர் மீட்டுக்கொள்ளும் பாவிகளாகிய நமக்கு எவ்வளவு தேவை! சுயநயம் நம்முடைய அன்பைத் தன்னயமாக மாற்றிவிடுகிறது. நம்மை நாமே வெறுத்தால் தான் நாம் அன்புடையவர்களாகக்கூடும். நம்முடைய எஜமானைப்போல பூரணராய் நாமிருந்தால் அன்பின் தன்மையை மற்றவர்களுடைய நன்மைக்காக நம்மையே கொடுப்பதில் காட்டலாம்.

சிலுவை சுமந்தோனாக,
யேசு, உம்மைப் பற்றினேன்;
ஏழைப் பரதேசியாக
மோட்சவீடு நாடுவேன்;
உற்றார், மேன்மை, ஆஸ்தி, கல்வி,
ஞானம், லோகம் அனைத்தும்
அற்ப குப்பை என்று எண்ணி
வெறுப்பேனே முற்றிலும்.

துஷ்டர் என்னைப் பகைத்தாலும்,
 நீரே தஞ்சம் ஆகுவீர்;
கஸ்தி என்ன நேரிட்டாலும்,
 இனி மேன்மை தருவீர்;
உமதன்பு என்னைத் தேற்ற,
 துக்கம், பயமில்லையே;
நாதா, உம் ப்ரசன்னம் நீங்க,
 இன்பமெல்லாம் துன்பமே.

நெஞ்சமே, விண் மேன்மை நோக்கி
 பாவம் பயம் அகற்று;
எந்தக் கஷ்டத்தையும் தாங்கி
 மீட்பரை நீ பின்பற்று,
திவ்ய அன்பைச் சிந்தைசெய்து
 நித்ய மீட்பை நினையேன்;
ஆவியின் சகாயம் நம்பு,
 நெஞ்சமே, கலக்கம் ஏன்?

X. சிலுவை பாரமாயிருக்குதல்.

நீங்கள் நன்றாய் ஓடினீர்களே, உங்களுக்குத் தடை செய்தவன் யார்? கலா. 5: 7.

நீ சிலுவையைச் சந்தோஷமாய்ச் சுமந்தால் அது உன்னைப் பத்திரமாய்க் கொண்டுபோகும். (Thomas a Kempis.)

அந்தப் பிரயாணி தன் சுமையைத் தூக்கிக்கொண்டு கொஞ்சதூரம் போவதற்குள்ளாக வேணுமென்று அந்தப் பாரத்தைத் தன் தோளினின்று இறக்கி அதை இனிமேல் கொண்டுபோகப் பிரியமில்லாமல் தூர வைக்க நான் பார்த்தேன்.

என்றாலும் எப்போதும் உண்மையும் கவலையுமுள்ள ஆண்டவர், ஜீவ பாதையில் அவனை நடத்தும்படியாகத் துவக்கின அவர் அவனை இந்த ஸ்திதியில் விட்டு விடப் பிரியப்படவில்லையென்பதற்குச் சந்தேகமில்லை. இந்த அபாத்திரச் சீஷனண்டை போய் அன்போடு கண்டிப்பதற்காக அவனைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லுகிறார்:—

ஆண்டவர்: என்னப்பா, ஒருமணி நேரமாவது உன் சிலுவையைச் சகிக்க உன்னால் முடியாதா?

சீஷன்: ஆண்டவரே, இந்தக் கடினமான ஊழியஞ் செய்வதற்கு என் பெலன் போதாதென்று காண்கிறேன்.

ஆண்டவர்: என் தொண்டர் அநேக உபத்திரவங்களின் வழியாய்ப் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லையா?

சீஷன்: ஆம், அப்படிச் சொல்லியிருக்கிறீர். என்றாலும் நான் சிலுவையைச் சுமப்பதற்குமுன் உம்முடைய வார்த்தைகள் இவ்வளவு துன்பத்தைக் கொடுக்கக்கூடியவைகளென்று நான் நினைக்கவில்லை.

ஆண்டவர்: அப்படியானால் உனக்குக் கடினமாயிருப்பது என்ன?

சீஷன்: என் நிலைமையைக்குறித்து நான் அதிக வருத்தப்படுகிறேன். தேவனை விசுவாசியாமலும் ஒரு பொழுதும் ஜெபம் செய்யாமலுமிருக்கிற அநேகர் என்னைப்பார்க்கிலும் அதிகச்சந்தோஷமாயிருக்கிறார்களே.

ஆண்டவர்: என் பிள்ளையே, நான் சகல சம்பூரணராயிருந்தும் உனக்காக எளிமையை அடையவில்லையா?

சீஷன்: தெரியும், என் இரட்சகரே. ஆனாலும் நான் இந்த மார்க்கத்தை அனுசரித்ததினால் அநேக காரியங்களை இழக்கவேண்டியதிருக்கிறது. ஆகையினால் கொஞ்சக் காலமாவது மார்க்க கவலைகளில்லாமல் இளைப்பாறத் தீர்மானித்திருக்கிறேன்.

ஆண்டவர்: புத்தியில்லாத நன்றிகெட்ட பிள்ளையே, என் சிலுவையைச் சுமக்காமல் என்னோடு கிரீடம்பெற முடியுமென்று நினைக்கிறாயா? அனாவசியமாய் என் சீஷர்மேல் ஏதாவதொரு பாரம் சுமத்தினேனென்று எண்ணுகிறாயா? பொறுமையாய் என்னுடன் பாட

னுபவித்துக் கடைசிபரியந்தம் நிலைநிற்பாயானால்மட்டும் என்னோடு ஐக்கியப்படுவாய், என்றார்.

ஆண்டவர் நமக்களித்திருக்கிற இளைப்பாறுதல், சமாதானம், சந்தோஷம் முதலான அருமையான வாக்குத்தத்தங்களைக் குறித்து தப்பிதமாய் எண்ணும் அநேகருண்டு. அவர் தம் சீஷர்களுக்கு உலக க்ஷேமம் கொடுப்பேனென்று ஒருபோதும் வாக்களிக்கவில்லை. ஆண்டவரே உபத்திரவத்தினால் பூரணராக வேண்டுமானால் அவருடைய சீஷர்கள் எத்தனை அதிகமாய்அப்படியாக வேண்டும் (எபி. 2:10).

இரட்சகர் தன் இரட்சிப்பை மனுஷருக்குக் கொடுக்கும்போது சிலுவை சுமக்கவேண்டியதில்லையென்று ஒருபோதும் சொல்லவில்லை. பரலோகத்துக்கு இலேசாய்ப் போய்விடலாமென்ற வீண் ஆவலான எண்ணத்தை விட்டுவிடும்படி அவர்களை அடிக்கடி கண்டித்திருக்கிறார். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு (யோவா. 16:33). பூமியிலே சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல பட்டயத்தையே அனுப்பவந்தேன் (மத். 10:34). யாதொருவன் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் (லூக். 14:26).

தன் ஜீவனைக்காக்கிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான் (மத். 10:39). துன்பத்தின்மேல் துன்பம் வந்தாலும், ஒருவேளை யோபுக்கு நேரிட்ட கடினமான சோதனையுண்டானாலும், விசுவாசியொருவன்

அதைக்குறித்து ஆச்சரியப்படவும் அதினால் இளக்காரித்துப்போகவுங்கூடாது. நம்முடைய புறம்பான காரியங்களெல்லாம் கெட்டழிந்துபோகும்போதும் உள்ளாக மனவருத்தப்படும்போதும் பின்வரும் போதனையை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

"என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே; அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்" (நீதி. 3:11, 12).

நாம் சிட்சையை அற்பமாய் எண்ணக்கூடாது. நாம் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகவுங் கூடாது. இப்படிச்செய்வது இரண்டும் தப்பிதந்தான்.

வெகுநாள் வியாதிப்படுக்கையிலிருக்கும்சீஷன்,இந்த ஜீவியத்தின் கவலையினால் அதிகவருத்தப்படுகிற ஏழைகள், சித்திபெறாமல் துன்பப்பட்டு அசட்டைபண்ணப்பட்டிருக்கிற தேவனுடைய பிள்ளைகள், இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்து தன் சிலுவையைச் சகித்தபிரகாரம் சாந்தமாயும் பொறுமையாயும் தங்கள் சிலுவையைச் சகிக்கவேண்டும். தனக்குண்டான ஏராளமான துன்பத்தில் யோபு தனக்குத் தெரியாமலே முறுமுறுக்க நேரிட்டது. ஆனால் அவனுக்கு அந்தத் துன்பங்கள் உண்டான காரணம் தெளிவானவுடனே மனந்திரும்பி, "எனக்குத் தெரியாததையும் என் புத்திக்கு எட்டாததையும் நான் அறியாததையும் அலப்பினேன். ஆகை

யால், நான் என்னை அருவருத்துத் தூளிலும் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படுகிறேன்" (யோபு 42:3, 6), என்று சொன்னான்.

நமக்குண்டாகும் அநேகம் சோதனைகள் நம்முடைய இருதயத்தில் இன்னுமிருக்கும் கெட்ட எண்ணங்களையும் பாவ சுபாவங்களையும் அகற்றப் பிரயாசப்படுவதினால்தான் உண்டாகிறது. அதில் தீமையான விருப்பம் இருக்கிறவரை துன்பப்படவேண்டியதுதான். ஏனென்றால் ஒரு வழக்கத்தை விட்டுவிடவேண்டுமானால் வருத்தமுண்டாகத்தான் செய்யும்.

உத்தம கிறிஸ்தவனுங்கூட எப்போதும் விழிப்புள்ளவனாயும் போராடுகிறவனாயுமிருக்கவேண்டும்.

அநேகருக்குள் ஜென்மப்பாவமதிகமுண்டு. அவர்களுக்குண்டாகிற போராட்டம் நீடித்ததாயும் இளைப்பைக் கொடுக்கிறதாயுமிருக்கிறது. சிலவேளைகளில் அவர்கள் அதினால் பயமடைந்து, நான் எந்த நாளிலாகிலும் ஒரு நாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன் (1 சாமு. 27:1) என்று தாவீது சொன்னபிரகாரம் அவர்களும் சொல்லலாம். அவர்கள் அதைரியப்பட்டு மனச்சோர்வடைந்து நம்பிக்கையையும் ஜெபத்தையும் கொஞ்சங் குறைய முழுவதுமாய் விட்டுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் யுத்தம் மும்முரமாய் நடக்கும்போது போர்க்களத்தில் இளைப்பாறிக்கொண்டிருக்கிறவர்களாகத் தங்கள் இராஜா காண்கிற போர்ச்சேவகருக்கு ஒப்பானவர்கள். அப்படிப்பட்டவர்களைக்குறித்து

"யாக்கோபே, இஸ்ரவேலே, என் வழி கர்த்தருக்கு மறைவாயிற்று என்றும், என் நியாயம் என் தேவனிடத்தில் எட்டாமற்போகிறதென்றும் நீ சொல்வானேன். பூமியின் கடையாந்தரங்களைச்சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை. இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்துமுடியாதது. சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன்கொடுத்து சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்; நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" (எசா. 40:27—31), என்று சொல்லுகிறார்.

சிலர் பரலோக ராஜ்யத்தின் நல்ல வேலையில் சில வேளைகளில் இளைப்புடையவர்களாயும் அதைரியப்பட்டவர்களாயும்போகிறார்கள். அதிகமாய் உழைத்த தேவ ஊழியர் வீணிலே அநேக வருஷமாய் உழைத்துத் தங்கள் பலம் எல்லாவற்றையும் விருதாவில் செலவழித்ததுபோலிருக்கிறது. அவன் ஊழியஞ்செய்யும்படி ஆண்டவர் குறித்த நாட்டைச் சுற்றிப் பார்க்கும்போது தான் விதைத்த விதையில் ஒன்றாவது முளைத்துப் பலன் தராததைக் காணும்போது வருத்தம் அதிகமுண்டாகலாம். அவனைச் சுற்றிலுமுள்ள அஞ்ஞானிகள்

அவனுடைய போதனைகளையும் பிரசங்கங்களையும் கேட்டபோதிலும் இருதயக் குருட்டாட்டத்திலும் அறிவில்லாமையிலும் இன்னுமிருக்கிறார்கள். ஒரு சிறிய தோட்டத்தையுண்டாக்கி அதைச் சுற்றிலும் வேலியடைத்துத் திராட்சச்செடியை நாட்டி அது பலன் கொடுக்கிற சமயத்தில் காட்டுப்பன்றி வந்து வேலியை முறித்துத் திராட்சச்செடியையும் அழித்துவிடுகிறதை பார்க்கிறான். "நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக் கொடியைக் கொண்டுவந்து ஜனங்களைத் துரத்திவிட்டு அதை நாட்டினீர். அது வேரூன்றித் தேசமெங்கும் படர்ந்தது. அதின் நிழலால் மலைகளும் அதின் கிளைகளால் திவ்வியமான கேதுரு மரங்களும் மூடப்பட்டது. அதுதான் கொடிகளை சமுத்திரமட்டாகவும் தன் கிளைகளை நதிமட்டாகவும் படரவிட்டது. இப்பொழுதோ வழிநடக்கிற யாவரும் அதைப்பறிக்கும்படியாக அதின் அடைப்புகளை ஏன் தகர்த்துப்போட்டீர்? காட்டுப்பன்றி அதை உழுதுபோடுகிறது. வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்துபோடுகிறது," என்று புலம்ப வேண்டியதாயிருக்கிறது (சங். 80:8—13).

தங்கள் பிள்ளைகளுடைய மனம் மாறுபாடுள்ளதாயும் முரட்டுக்குணமுள்ளதாயுமிருக்க அநேக பெற்றோர் காண்கிறார்கள். குருமாரிலநேகர் தங்கள் ஊழியத்தில் சோர்வடைகிறார்கள். தங்களுடைய கோட்டை கொத்தளங்களை விட்டுவிடாமல் எதிர்த்துப் போராடுவதில் பிசாசும் பாவமும் தாங்கள் நினைத்ததற்கு அதிகமாய்ப் பலமுள்ளவைகளாயிருக்கிறதை அநேக மார்க்க சீர்

திருத்தர் பார்க்கிறார்கள். "விசுவாசத்தைத் துவக்குகிற வரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையாய் ஓடக்கடவோம். அவர் தமக்குமுன்வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார்" (எபி. 12:1, 2), என்ற போதனையை அநேக போதகன்மார் மறந்து தங்கள் ஊழியத்தில் இளக்கரித்து வேலைசெய்யாமற்போகிறார்கள். இளைத்துப்போகிற ஒவ்வொரு ஊழியக்காரனுக்கும் கிறிஸ்துவின் முன்மாதிரியே தைரியத்தைக் கொடுக்கிறது.

மாமிசம் சிலுவையிலறையப்படவேண்டிய திருப்தியினால் சரீரத்திலும் மனோதத்துவங்களிலும் துன்பமும் இளைப்பும் உண்டாவதற்காகக் கிறிஸ்து நம்மைக்கடிந்துகொள்ளாமல் ஆவி சோர்வடைகிறதினால்தான் கண்டிக்கிறார். கிறிஸ்து பாவமில்லாமல் மனுஷனாக இளைப்படைந்தார். நாமும் அப்படியே இளைப்படையலாம். அவருடைய மெல்லிய தேகம் பயங்கரமான பாரம் பொறுக்கமாட்டாமல் சாய்ந்தது. துன்பம் நிறைந்த பாத்திரத்தைத் தன்னைவிட்டு நீக்கிவிடும்படி அதிக வருத்தத்தோடு அவர் மெல்லிய ஆவி சத்தமிட்டது. என்றாலும் இது எல்லாவற்றிலும் மனதாரப் பாடுபட்டதினால் சிலுவையின்பாரத்தினால் அவர் சாய்ந்தாரென்றாலும்அதை ஒருபொழுதும் கீழே வைக்கவில்லை. பாத்திரம் நீங்கும்படி ஜெபித்தார். என்றாலும் தன் கையினால் அதைத் தூரத்தள்ளிவிடவில்லை. லாசருவின் கல்லறையண்டை

கண்ணீர்விட்டார். ஆனாலும் முறுமுறுக்கவுமில்லை, தன் பிதாவின் அன்பிலும் உண்மையிலும் அவர் விசுவாசம் அற்றுப்போகவுமில்லை. உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டென்றும் (யோவா. 16:33), என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பானென்றும் (மத். 10:39) தன் சீஷருக்கு அவர் சொல்லுகிறார்.

சுபாவத்தில் சிலுவைநுகம் பாரமுள்ளதுதான். அந்தப் பாரத்தை உணருகிறது நம்முடைய மாமிசமும் சுபாவமுந்தான். "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும் உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதுப்பிக்கப்பட்டும்" (2 கொரி. 4:16) உயிருள்ளதாயும் சந்தோஷமுள்ளதாயும் வளருகிறது. அதினால் பவுல் அப்போஸ்தலன் பின்வரும் வாக்கியங்களை உரைப்பதில் ஆனந்தமடைகிறார். "துக்கப்படுகிறவர்களென்னப்பட்டாலும் எப்போதும் சந்தோஷப்படுகிறவர்களாயிருக்கிறோம்" (2 கொரி.6:10). "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்தில் விளங்கும்படிக்கும் இயேசுவின் மரணத்தை எப்போதும் எங்கள் சரீரத்தில் சுமந்துதிரிகிறோம்." (2 கொரி. 4:8, 10).

உலகத்தை தேவனிடத்தில் திருப்பும்படி அதிகமாய் பிரயாசப்படுகிறவர்கள் "பகற்காலமிருக்குமட்டும் கிரி

யைகளைச் செய்” (யோவா. 9:4), என்கிற பரம சத்தத்தை எப்போதும் கேட்கிருர்கள். தான் விதைத்த விதையெல்லாம் முளைத்துவிட்டதாமென்று பார்க்கும் வரை ஜார்ஜ் உவிட்பீல்ட் தாமதிக்கவில்லை. எல்லாத் தண்ணீர்களண்டையிலும் அவர் விதை விழுந்தது. தான் சாகும் காலையில் கைகளைக் கூப்பி உயரத்தூக்கி இயேசுவே, ஆண்டவரே, உம்முடைய ஊழியத்திஞல் இளைப்படைந்தபோதிலும் அதில் எனக்கு வெறுப்புண்டாகவில்லை. இன்னெருதரம் நான் வெளியே போய் உம்மைக்குறித்துப் பேசி உம்முடைய சத்தியத்தை மனுஷர் மனதில் அழுந்த உரைத்து வீடு சேர்ந்து சாவேஞக, என்று ஜெபித்தார். நாம் சிலுவையிஞல் இளைப்படைந்தாலும் அதை வெறுக்கக்கூடாது. ஸ்தோத்திரிக்கப்பட்ட ஆண்டவர் நமக்குக் காட்டின அன்புக்காகவும், செய்த ஊழியத்திற்காகவும், பலிக்காகவும் நாம் அளிக்கும் அற்பப்பதில் அவருக்காக நாம் செய்யும் ஊழியந்தான். என்ருலும் நம்மால் செய்யக்கூடியது அதுவே. “அவருடைய திராட்சத்தோட்டத்தில் நம்மை அத்திமரங்களாகநாட்டி நமக்காகக்கவலைப்பட்டுகொத்தி எருப்போட்டு வளர்த்த அவருடைய கவலைக்காக அவர் எதிர்பார்க்கிறதும் அதுவே.” “நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதிஞல் என் பிதா மகிமைப்படுவார்,எனக்கும் சீஷராயிருப்பீர்கள்” (யோவா.15:8)

சிலுவையிஞல் நாம் இளைப்படைந்திருக்கிருேமா? அப்படியாஞல் நாம் கோழைகள். மேன்மையையும், மோட்சபாக்கியத்தையும் தேடுவதற்குநாம் அபாத்திரர்.

கிறிஸ்துவின் சத்துருக்களிலொருவன் கீழ்ப்படுத்தக் கூடும்போது, அல்லது நமது உண்மையான ஊழியத்தினுல் ஒரு ஆத்துமா இரட்சிப்படையக் கூடும்போது நம்முடைய ஊழியத்தின் போராட்டத்தை விட்டு விடக்கூடாது. "நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாதிருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்திலறுப்போம்" என்று ஆண்டவரின் நாமத்திஞல் அப்போஸ்தலன் சொல்லுகிற (கலா. 6: 9) உற்சாகமான வசனத்தை நாம் மறந்துபோகக்கூடாது.

"துக்கபாரத்தால் இளைத்து
நொந்து போனுயோ?
யேசு உன்னைத் தேற்றிக்கொள்வார்,
வாராயோ?"

"அன்பின் ரூபகாரமாக
என்ன காண்பித்தார்?"
"அவர் பாதம் கை விலாவில்
காயம் பார்."

"அவர் சிரசதின் க்ரீடம்
செய்ததெதனுல்?"
"ரத்தினம் பொன்னுலுமல்ல,
முள்ளினுல்."

"கண்டு பிடித்தண்டினாலும்
துன்பம் வருமே,"
"கஷ்டம், துக்கம், கண்ணீர் யாவும்
இம்மையே."

"அவரைப் பின்பற்றினோர்க்கு
துன்பம் மாறுமோ?"
"சாவின் கூரும் மாறிப்போகும்,
போதாதோ?"

"பாவியேனை ஏற்றுக்கொள்ள
மாட்டேன் என்பாரே."
"விண், மண் ஒழிந்தாலும் உன்னைத்
தள்ளாரே."

"போரில் வெற்றி சிறந்தோர்க்கு
கதியா ஈவார்?"
"தூதர், தீர்க்கர், தூயர், யாரும்
ஆம் என்பார்."

வாரா வினை வந்தாலும், சோராதே, மனமே;
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.

அலகை சதித்துன் மீது வலை வீசினாலும்,
அஞ்சாதே; ஏசுபரன் தஞ்சம் விடாரே;— வாரா

உலகம் எதிர்த்துனக்கு மலைவு செய்தாலும்,
உறுதிவிட்டயராதே, நெறி தவருதே;— வாரா

பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணுரே;
பிள்ளை ஆகில் அவர் தள்ளி விடாரே.— வாரா

தன் உயிர் ஈந்திட்ட உன் ஏசுநாதர்
தள்ளுவாரோ? அன்புகொள்ளவர் மீதே.— வாரா

வையகமே உனக் குய்ய ஓர் நிலையோ?
வானவனை முற்றுந் தான் அடைவாயே.— வாரா

XI. சிலுவையின் பாரத்தைத் தணித்தல்

"அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவரு டைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" உபா.33:27.

"நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத் திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாத வராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." எபி. 4: 15.

இப்போது தனக்குக் கொடுத்த பாரத்தைச் சந்தோஷமாய்ச் சுமந்து சீஷன் தன் ஆண்டவரின் அடிச்சுவடுகளில் தீர்மானத்தோடு பின்பற்றிவருவதாகக் காணப்பட்டான். அவன் வரத்தும் போக்கும் உறுதியான நோக்கத்தைக் காண்பித்தது. வழியில் வருத்தங்களும் உழைப்புமிருந்தபோதிலும்அவன் திருப்தியடைகிறான் என்பதும் தோன்றினது. என்றாலும் கடைசியாக ஒரு மாறுதலுண்டானது. இப்போ அவன் தீர்மானத்தின் உறுதி குறையவில்லை. தனக்குக் கொடுக்கப்பட்ட கடமையை நிறைவேற்றவும் பாடனுபவிக்கவும் அவன் பின் வாங்கவில்லை. ஆனால் மாம்ச பெலவீனத்தினால் குறைவு படத் தொடங்கினான். முழங்கால் நடுக்கமெடுத்தது. அவன் முகம் வெளுத்துப்போயிற்று. கடைசியாக மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான். ஆனால் இப்போது அவன் காரியம் முன்போலல்ல. முதல்முதலாக அவன் மாம்சமும் ஆவியும் சிலுவையைச் சுமக்கப் பிரியப்பட வில்லை. பின்பு அவன் ஆவி கொஞ்சம் பிரியப்பட்ட போதிலும் மறுபடியும் பற்பல சாக்குப்போக்குகள்

சொன்ஞன். கடைசியாக ஆண்டவரின் சித்தத்துக்கு முழுவதும் கீழடங்கித் தன் கழுத்தை வணங்கி அவரை முழுவதுமாகப் பின்பற்றிஞன். இப்போ சிலுவையைத் தள்ளிவிடாமல் அதின் பாரம் பொறுக்கமாட்டாதவ ஞய் விழுகிறதை நாம் பார்க்கிரேம். அந்தக் காட் சியைப் பார்க்கிறவர்கள் கண்ணீர்விடாமலிரார்கள்.

சீக்கிரம் என்னைத்தவிர மற்றவர்களும் அதைப்பார்த் தார்கள். ஸ்தோத்திரிக்கப்பட்ட ஆண்டவர் அவனு டைய பெருமூச்சுகளையும் ஜெபத்தையும் கேட்டார். அவன், "தேவனே, என்னை இரட்சியும்; வெள்ளங்கள் என் ஆத்துமாமட்டும் பெருகிவருகிறது. ஆழமான உளையில் அமிழ்ந்திருக்கிறேன், நிற்க நிலையில்லை, நிலை யாத ஜலத்தில் ஆழ்ந்திருக்கிறேன்" (சங். 69: 1, 2): "என் ஆத்துமா ஜீவனை அரோசிக்கிறது" (யோபு 10:1): "இன்றையத்தினமும் என் அங்கலாய்ப்பு முரண்டுத் தனமாக எண்ணப்படுகிறது; என் தவிப்பைப்பார்க்கி லும் என் வாதை கடினமானது" (யோபு 23: 1, 2): "என் ஆத்துமா என்னில் முறிந்துபோயிற்று; உபத் திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக்கொண்டது" (யோபு 30: 16): நான் சத்தமிட்டுக் கூப்பிட்டாலும் என் ஜெபத்துக்கு வழியை அடைத்துப்போட்டார்;" "என் பெலனும் நான் கர்த்தருக்குக் காத்திருந்த நம் பிக்கையும் அழிந்துபோயிற்று" (புல. 3: 8, 18), என்று புலம்பி அழுதான்.

நம்முடைய பெலவீனத்தில் நம்மோடு அனுதாபப் படுகிற அவர் துக்கபாரத்தால் நொந்துபோன ஆத்துமா வின் அங்கலாய்ப்பைக் கேட்டு அவனுக்கு ஒத்தாசை

செய்ய வந்தார். கிருபைமிகுந்த அவர் தம் கையை நீட்டி மூர்ச்சையடைகிற சீஷனை அதிகத் துரிதமாகவும் அதிக அன்போடும் அதிக மெதுவாகவும் அதிக வல்லமையோடும் தூக்கிக்கொண்டே, "நீ பயப்படாதே, நான் உன்னுடனேகூட இருக்கிறேன்" (ஏசா. 41: 10): "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரி. 12: 9): "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்போது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி. 2: 10), என்று சொன்னார்.

ஆண்டவரால் மீட்கப்பட்டவர்களுடைய சரித்திரம் எழுதப்படும்போது அவர்கள் பொறுமையாய்ச் சகித்த துன்பங்களும், தன்னயத்தை விரும்பாமல் ஆண்டவருக்காக அவர்கள் செய்த ஊழியங்களும் எவ்வளவு ஆச்சரியத்தைக் கொடுக்கிற சங்கதியாயிருக்கிறது.

அப்படி மீட்கப்பட்டவர்களுக்குத் திருஷ்டாந்தமாக சிலபேர்களைக்குறித்து வேதத்தில்சொல்லியிருக்கிறது. பவுல் தன்னைக்குறித்து,"அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்;ஆறுகளால் வந்த மோசங்களிலும்,கள்ளரால் வந்த மோசங்களிலும், அன்னிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்திலுண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரிடத்திலுண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும் அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்" (2 கொரி. 11: 26, 27), என்கிறார்.

மேலும் தன் முன்னோரைக்குறித்து, உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிராதபோதிலும், “நிந்தனைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீக்ஷை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்” (எபி. 11:36, 37), என்று சொல்லுகிறார்.

என்றாலும் இந்தத் துன்பங்களிலெல்லாம் மரணத்தின் பயங்கரத்தை நமக்கு நீக்கக்கூடிய ஒருவர் நம்மோடிருக்கிறார். எலியா தீர்க்கதரிசி விக்கிரகாராதனை நிறைந்த ராஜ அரண்மனையைவிட்டுக் காட்டுக்கு ஓடிப்போனது நம்முடைய ஞாபகத்துக்கு வருகிறது. என்றாலும் அவன் அங்கே தனிமையாய் விடப்படவில்லை. இரக்கமுள்ள ஆண்டவர் அங்கேயும் அவனைப்பார்த்து, அவனுடைய நிலைமையைக்குறித்து (1 ராஜா. 19:13) விசாரிக்கிறார். அவனைப் பார்த்து, “இங்கே உனக்கு என்ன காரியம்?”என்றார். “அவன்,தேவனுடைய சத்துருக்களோடு போராடினேன், பலத்த அவர்களுடன் போராட நான் ஒருவன்மாத்திரந்தான் இருக்கிறேன்,” என்று சொல்லி, “போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல,” என்று கதறினான் (1 ராஜா. 19: 4). பின்பு விம்மி அழுத பிள்ளையைப் போல படுத்துத் தூங்கிவிடுகிறான். ஆனாலும் இரட்சகர்

அவனை நினைத்து அவனுக்குச் சாப்பாடு கொடுக்க ஒரு தூதனை அனுப்புகிறார். நாற்பது நாளாகச் சாப்பிடாமல் உயிரைக் காப்பாற்றத்தக்கதாக அந்தச் சாப்பாடு அவ்வளவு நேர்த்தியானதாயிருந்தது. அதற்குப்பிற்பாடு கர்த்தருடைய மகிமையின் மாட்சிமையான வெளிப்படுத்தலைக்காணவும் பரம உணவைச் சாப்பிடவும் போனான்.

தங்களுடைய தேவனுக்கு உண்மையாயிருந்ததினால் அக்கினிச் சுவாலையில் எறியப்பட்ட தானியேலின் வாலிப சிநேகிதரையும் நாம் நினைவுகூரலாம். அக்கினியின் மத்தியில் அவர்கள் தலைமயிரும் வேகாதபடி காத்துக்கொண்டிருந்த ஒருவர் அவர்களோடு உலாவிக் கொண்டிருந்தார்.

தானியேலைச் சிங்கக்கெபியில் போட்டதும் நம்முடைய ஞாபகத்துக்கு வரலாம். அது பெரிய துன்பந்தான். என்றாலும் நித்திய புயங்கள் அவனைத் தாங்கினது.

விசாரத்தினால் நிறைந்து மகிமையுள்ள ஆண்டவரைச் சுற்றிலுமிருந்த பதினொரு பேர்களின் கூட்டமும் நம்முடைய ஞாபகத்துக்கு வருகிறது. அந்தத் துன்ப நேரத்திலும் அவர் சொன்ன வார்த்தைகள் எவ்வளவு அன்பும் ஆறுதலும் நிறைந்தவைகள். அப்படிப்பட்ட வார்த்தைகளை மனுஷர் ஒருக்காலும் கேட்டதில்லை. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக," என்பதே அவர் முதல் முதலாகச் சொன்ன வார்த்தை (யோவா. 14:1). "நான் போவேனேயாகில் தேற்றரவாளனை உங்களுக்கு அனுப்புவேன்" (யோவா. 16:7), என்றும்

அடிக்கடி சொன்னார். இந்தப் பட்சமான வார்த்தைகளைச் சொல்லி முடித்தவுடன் ஜெபிக்கவும் பாடுபடவும் காட்டிக்கொடுக்கப்படவும் அவர்களுடைய மீட்புக்காகத் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுக்க ஆயத்தப்படவும் தோட்டத்துக்குப் புறப்பட்டுப்போனார். பாடு நிறைந்த ஜெபத்தை முடித்தவுடன் திரும்ப வந்து விசனத்தினால் அவர்கள் தூங்குகிறதைக் கண்டு நித்திய புயங்களினால் அவர்களைத் தட்டியெழுப்பி, "ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பெலவீனமுள்ளது," என்று சொன்னார் (மத். 26:41).

ஆகையினால் அவர் சிலுவையை நம்மைவிட்டு விலக்கிப்போடாமல் அதினால் இளைத்து விழுகிறவர்களைக் கைதூக்கிவிடுகிறார்.

இவ்விதமாகத் தங்கள் பாரச்சுமையினாலும் தங்கள் மாம்ச பெலவீனத்தினாலும் தவித்துப்போனவர்களுக்குச் சமீபமாக அவர் எப்பொழுதும் இருக்கிறார். நமது விசுவாசக் குறைவிலல்ல. நமது மாம்ச பெலவீனத்தில்தான் தமது பூரண பெலத்தை விளங்கச்செய்வேனென்று வாக்களித்திருக்கிறார். நமது திராணிக்கு மிஞ்சி நாம் சோதிக்கப்பட தேவன் இடங்கொடுக்க மாட்டார். சோதிக்கப்படும்போது அதிலிருந்து தப்பும் வழியையும் உண்டாக்கிவைப்பார்.

சிலுவை சுமக்கும் தமது சீஷர்களுக்கு இரட்சகர் எவ்வளவு உருக்கமும் உண்மையுமுள்ளவராயிருந்திருக்கிறார் என்பதை எல்லாக் காலத்து திருச்சபையோரும் சாட்சி பகர்வதை நாம் காணலாம்.

ஆனால் அந்த ஆதித் திருச்சபையில் மகா பூர்வீக போதகராகிய கிரகோரியின் தாயார் நன்ற என்பவள் விஷயத்தில் இன்னொரு திருஷ்டாந்தம் காணலாம். அந்தம்மாளுடைய ஜெபத்தினாலும் பக்தியுள்ள ஜீவியத்தாலும் அவர் குணப்பட்டுக் கிறிஸ்தவரானார். கர்த்தர் தனக்குச் செய்பவைகளை அந்த அம்மாள் நினைக்கும் போதெல்லாம் தன் வருத்தமெல்லாம் தனக்குத் தோன்றுகிறதில்லையென்று அந்தம்மாளுடைய குமாரன் அவர்களைக்குறித்துச் சொல்லுகிறார். அதினாலேதான் திருநாட்களில் அந்தம்மாள் துக்கமுகமாயிருந்ததே யில்லை.

இதற்குச் சற்று முந்தி அப்போஸ்தலர் காலத்தில் எப்படிப் பிலிப்பிப் பட்டணத்தில் சிறைச்சாலையிலடைபட்டிருந்த தமது சீஷருக்கு இரட்சகர் காணப்பட்டு அவர்களிருதயம் மகிழச்செய்து ஸ்தோத்திர கீதம் பாடச்செய்தார் என்பதை நாம் காணலாம்.

பவுல் அப்போஸ்தலன் குணப்பட்டபின் அவருடைய ஜீவியமுழுதும் மாம்ச பெலவீனத்தில் ஆவியில் களிகூர்வதற்கு ஓர் திருஷ்டாந்தமாயிருந்தது.

இதற்கு முந்திய தீர்க்கதரிசிகள் முற்பிதாக்கள் காலத்தைப் பார்க்கிலும் அவர்கள் சோதிக்கப்படுகையில் எப்படித் தாங்கப்பட்டார்களென்பதைக் காணலாம். 18-ம் சங்கீதத்தில் தாவீது தன் சுய அனுபவத்தை எவ்வளவு மாட்சிமையோடு விஸ்தரிக்கிறார் பாருங்கள் (சங். 18 : 4, 7, 9, 10, 16, 19).

“இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” (மத். 28 : 20); “நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்,” என்கிறார் (யோவா. 14:18). இவை நம்மை நேசித்து நமக்குத் தகுந்த சிலுவையை நியமித்து, நமது பெலத்தையும் நமது சிலுவையின் பாரத்தையும் அளந்தறிகிற ஒருவர் சொல்லும் வார்த்தைகள். மாம்சம் பெலவீனப்பட்டு தவித்துப்போனால் போகட்டும். நமது பாதை கரடுமுரடாயும் மாம்சம் இடறிவிழுகிறதாயுமிருந்தால் இருக்கட்டும். நமக்காக சிலுவை சுமந்தவர் நாம் நமது சிலுவையைச் சுமக்க நமக்குதவிசெய்வார்.

1 அருள் நிறைந்தவர்,
பூரண இரட்சகர்
தேவரீரே
ஜெபத்தைக் கேட்கவும்
பாவத்தை நீக்கவும்
பரத்தில் சேர்க்கவும்
வல்லவரே.

2 சோரும் என் நெஞ்சுக்கு
பேரருள் பொழிந்து
பெலன் கொடும்.
ஆ! எனக்காகவே
மரித்தீர், யேசுவே;
என் அன்பின் ஸ்வாலையே
ஓங்கச் செய்யும்.

3 பூமியில் துக்கமும்
சஞ்சலம் கஸ்தியும்
வருகினும்,
இரவில் ஒளியும்
சலிப்பில் களிப்பும்
துன்பத்தில் இன்பமும்
அளித்திடும்.

4 மரிக்கும் காலத்தில்
கலக்கம் நேரிடில்,
சகாயரே,
என்னைக் கைதூக்கவும்
ஆறுதல் செய்யவும்
மோட்சத்தில் சேர்க்கவும்
வருவீரே.

XII. சிலுவையும் கிரீடமும்

“நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.” வெளி. 2 : 10.

வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? வெளி. 7:13.

இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்தவர்கள். இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் (வெளி. 7:14).

இப்போது அந்தச் சிலுவை சுமந்த பிரயாணியின் பாடும் சோதனையும் நிறைந்த ஆச்சரியமான பிரயாணம் முடிவுக்குச் சமீபித்து வந்துவிட்டதென்பது தெளிவாயிற்று. அது அவன் முழுச்சாயலினாலும் அவனைச்சூழ உள்ளவற்றாலும் தெளிவாயிற்று. அவன் கண்கள் இப்போது அங்குமிங்கும் செல்லாமல் கர்த்தர்பேரில் ஒரே பார்வையாய் நோக்கிக்கொண்டிருந்தான். அவரையும் கவனித்துத் தன் பாதையையும் பார்த்துக்கொண்டு சென்றான். மனக்கலக்கமுள்ளவனாயிருந்த அவன் இப்போது அமர்ந்த குணமுள்ளவனாயிருக்கிறான். நம்பிக்கையின் ஆவலும், கீழ்ப்படியும் சிந்தையும் அவன் முகத்தில் காணப்பட்டது. மனமகிழ்ச்சியோடு காலை எட்டிவைக்கிறான். தன் பாரம் கொஞ்சமும் குறையாமலிருந்தும் முன்னே இருந்ததைப்பார்க்கிலும் அவனுக்கு இலேசாய்த் தோன்றுகிறது.

நாளுக்கு நாள் அவன் முன்னேறிச் செல்லச்செல்ல, “நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசத்தைப்போ

விருக்கும்" (நீதி. 4:18), என்று சொல்லியிருக்கிறபடி பரம ஒளி அவன் முகத்தில் பிரகாசித்தது.

கடைசியாக, மகா கஷ்டமும். கரடுமுரடானதுமான ஓர்பாதைக்குவந்துசேர்ந்தான். சிலவிடங்கள் காலூன்றி நிற்கக்கூடாதபடி அதிகச் செங்குத்தாயிருந்தது. சில சமயங்களில் மரணத்தின் பள்ளத்தாக்கு என்று சொல்லத்தக்கதான இருண்ட பள்ளத்தாக்குகளில் இறங்கி விடுவான். என்றாலும் அந்தப் பரம ஒளி முன்போலவே அவன் பாதங்களைச்சுற்றிப் பிரகாசித்துக்கொண்டேயி ருந்தது. இதைப் பார்க்க வெகு ஆச்சரியமாயிருந்தது.

அந்த இடம் பயங்கரமானதாயிருந்தாலும் அவனுக்கு அது பயங்கரமாயிருக்கவில்லை. அந்தகாரமுள்ளவிட மாயிருந்தாலும் அவனைச்சூழ பரம ஒளி பிரகாசித்துக் கொண்டேயிருந்தது. மனுஷ சஞ்சாரமில்லாமலும், யாதொரு பிரயாணியும் அங்கு காணப்படாமலும் பயங் கரமாய் மரணவாசல்போல் தோன்றினபோதிலும் கீத வாத்தியங்களோடு கூடிய இன்பமான இராகங்கள் அவன் காதில் தொனித்தன. அவனுக்கு எதிரே தேவ தூதர்கள் தேவனைத் துதித்துக்கொண்டும் பிரயா ணியை, "வாருமையா," என்று அழைத்துக்கொண் டும் எதிர்கொண்டு வருவதுபோல் காணப்பட்டது.

ஆகவே இந்த மந்தாரமும் பயங்கரமுமான இடங் கூட பூமியிலுள்ள வனாந்தரமான பாழ்நிலத்துக்கும் பரம கானானுக்கும் இடையிலுள்ள ஓரிடத்தில் இருக் கிறதென்பது தெளிவாயிற்று.

இப்படிக் கரடுமுரடான பாதைவழியாய் வெகுநாள் பிரயாணஞ்செய்ய நேரிட்டது. கடைசியில் உயரமும்

பயங்கரமாய்த் தோன்றினதுமான ஓர் வாசலண்டை பிரயாணி வந்துசேர்ந்தான். இரு பக்கமும் மதில்கள் மகா உயரமாய் எழும்பி அவன் வழியை மறித்தது. ஆகவே இந்தப் பிரயாணி இந்த வாசல் வழியாகக் கட்டாயம் பிரவேசிக்க வேண்டியதாயிருந்தது.

கொஞ்ச நேரமாக அறியாத காட்டுக்குள் பிரவேசிக்கலாமோ என்னவோவென்று திகைத்து நின்றான். இப்படித் திகைத்துக்கொண்டிருக்கையில் கொஞ்ச நேரம் இவனுக்குத் தென்படாமலிருந்த கர்த்தருடைய பிரசன்னம் இவனுக்குக் காணப்பட்டது. அந்தப் பெரிய வெண்கலக் கதவுகளை ஆண்டவர் திறந்து, தமது மலர்ந்த முகத்தைக் காண்பித்த உடனே இவனுடைய சந்தேகம் பயமெல்லாம் பறந்துவிட்டன.

ஆனால் இக்காட்சியின் பின்பாகத்தை யாரால் விஸ்தரிக்கமுடியும்? அந்தப்பிரயாணி மறுரூபமடைந்த தன் ஆண்டவருடைய சாயலை மகா ஆச்சரியத்தோடே பார்க்கிறான். இப்போது அவர் பூமிக்குரிய சாதாரண உடுப்பும் சிலுவைப் பாரமும் இல்லாமல், பரம உடையும் பிரகாசமுள்ள இரத்தினங்களமைந்த கிரீடமும் அணிந்தவராயிருந்தார். "அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப்போலிருந்தது; அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த வெண்கலம்போலிருந்தது. அவர் சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது" (வெளி. 1:14, 15).

கர்த்தர் அவனைப் பட்சமாய் அழைத்தவுடனே அந்தக் களைப்புள்ள பிரயாணி அந்த இருண்ட வாசலைத் தாண்டி உட்சென்றான். ஒரு நொடியில் கர்த்தர் தமது சொந்த வலதுகரத்தால் அச்சிலுவையை அவன் தோளிலிருந்து எடுத்து அவன் பார்வைக்குத் தெரியாமல் தூர எறிந்துவிட்டு அவன் தலைமேல் ஓர் அலங்காரமான கிரீடத்தை வைத்தார்.

சீக்கிரத்தில் இயேசுவும் பிரயாணியும் ஒரு பிரகாச முள்ள பாதைநெடுக ஏறிச்சென்று தூரத்தில் மாட்சி மையான ஓர் பட்டணவாசலிலிருந்து மகா சந்தோ ஷத்தோடு இவனுக்கெதிர்கொண்டுவந்த பரமசேனை யின் திரள்கூட்டத்தைச் சந்திக்கப்போனார்கள். அவர் கள் சந்திப்பும் ஒருவரையொருவர் வாழ்த்தியதும் மகா மாட்சிமையாயிருந்தது. மெய்யாகவே அவர்களில் சிலர் முன்னமே அந்தப் பிரயாணியைப் பார்த்திருந் தார்கள். வெகு நாளாகக் காணமற்போன அந்தப் பிள்ளையைச் சொல்லமுடியாத ஆனந்தத்தோடே உப சரிக்கிறார்கள். ஆனால் உலகத்திலிருந்து தன் பரம வீடு சேரும் பிரயாணியின் சந்தோஷம் இவ்வுலகத் துக்கடுத்ததல்ல. அவர்களெல்லாரும் அந்தப்பட்டணத் துக்கு நேரே ஒருமுகப்பட்டுத் திரும்பிப்போன அந்த மாட்சிமையான காட்சியைப் பார்த்துக்கொண்டே நின்றேன். ஆனால்,ஐயோ! ஒரு விநாடியில் ஒரு மேகம் வந்து இக்காட்சியை மறைத்துவிட்டது.

சிலுவை சுமத்தலின் முடிவு இதுதான். எல்லாக் காட்சிகளையும் ஒன்றன்பின் ஒன்றாய்ப் பார்த்தால் இந் தப் பிரயாணி துவக்கத்திலிருந்து கர்த்தருக்குக் கீழ்ப்

படிய மனமற்றவனுயிருந்ததைப்பற்றி நிச்சயமாய் ஆச்சரியப்படுவோம். துவக்கத்திலிருந்தே கீழ்ப்படிதலுள்ளவனும் சாக்குப்போக்குச் சொல்லாதவனுயுமிருந்தால் எவ்வளவு நன்ருயிருந்திருக்கும்? எப்படியாவது கடைசியாகக் கீழ்ப்படிய நேரிட்டது. சிலுவையின் மூலமாயல்லாமல் கர்த்தரைப் பின்பற்றிக் கிரீடம்பெற முடியாது. என்னைப் பின்பற்றுங்களென்று அவர் கொடுத்த கட்டளை பவுல் சொல்வதுபோல வாக்குத்தத்தமுள்ள கற்பனையாயிருக்கிறது (எபே. 6 : 3).

அக்கட்டளையில் முடிவும் துவக்கமுமிருக்கிறது. "சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா, அப்போ கிரீடம் அணிவதில் என்னைப் பின்பற்றுவாய்," என்பதே அக்கட்டளையின் கருத்தாம்.

பன்யன் என்பவரும் ஏறக்குறைய இதேமாதிரியான காட்சி கண்டார். அவர் கண்ட பிரயாணி தான் ஆண்டவருடைய சிலுவையண்டை வந்தபோது அவன் பாரம் அவனை விட்டு நீங்கிற்று. என்ருலும் பாரம் நீங்கிய பின்னும் அவன் ஒரு சிலுவையைச் சுமந்தான்.

மன்னிக்கப்படாத பாவத்தின் உணர்வும் அப்பாவத்துக்கு அடிமையாயிருந்ததுமே அந்தப்பாரம். ஆண்டவர் நிந்தையாய் மரணமடைந்த அந்தச் சிலுவையைக் கண்டவுடனே அச்சுமை அவனைவிட்டு நீங்கிற்று. என்ருலும் வெகுசீக்கிரத்தில் கஷ்டமென்னும் மலையண்டை வருகிருன். அதில் ஏற யாதொரு முயற்சியும் செய்யாதிருக்கும்போது இச்சிலுவையைச் சுமக்க மனமற்றிருப்பதற்காகக் கடிந்துகொள்ளப்படுகிருன். அப்புறம் வெகு சீக்கிரம் சிங்கங்களண்டை வந்து சேருகிருன்.

பின்பு தாழ்மையென்னும் பள்ளத்தாக்குக்கு வந்து அப்பொல்லியோன் என்ற ராக்ஷதனைச் சந்திக்கிறான். இப்படியே கிறிஸ்தியான் என்னும் அப்பிரயாணிக்குக் கடைசிவரைக்கும் சிலுவையிருந்ததுபோல இந்தப் பிரயாணிக்கும் சிலுவையிருக்கக் காண்கிறோம். கர்த்தர் தம்மைப் பின்பற்றுகிறவர்களுடைய எல்லாப் பாரத்தையும் நீக்கிவிடுகிறதாகச் சொல்லவில்லை. என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதே அவருடைய அழைப்பு. ஆனால் என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறதென்று சொல்லுகிறார் (மத். 11 : 29, 30).

அவர் நீக்குகிற பாரம் நமது குற்றம், மனவிசாரம், பயம், அடிமைத்தனம் ஆகிய இவைகளே. அவர் நமது மேல் ஏற்றுகிற பாரம் சுயவெறுப்பு, சோதனையில் பொறுமை ஆகிய இவைகளே. ஆனால் இதின் முடிவு எவ்வளவு மாட்சிமையானது! ஒருவராலும் கணக்கிட முடியாததும் சிலுவைக்குப் பதிலாய்க் கிரீடம் பெற்றுக்கொண்டவர்களுமான அந்த ஆயிரக்கணக்கான பிரயாணிகளைப்பற்றியும் கிரீடம் பெறுவோமென்ற நம்பிக்கையோடு இப்போது சிலுவை சுமந்துகொண்டிருக்கிற ஆயிரக்கணக்கான பேர்களையும்பற்றி சற்று சிந்தித்துப்பார்.

அநேக சீஷர்களுக்கு இது எப்பேர்ப்பட்ட மாறுதலாயிருக்கிறது! ஒருவன் எளியவனும் பலவீனனுயுமிருக்கிறான். அநேக வருஷக்காலமாய் இழுப்பு வியாதியால் கஷ்டப்படுகிறான். கடைசியாய் ஒரு இழுப்பு வந்து மகாக் குளிர்ந்த ஓர் பெரிய வெள்ளம் அவன்

மேல் புரண்டோடியதுபோல் தோன்றுகிறது. கடைசியாக நிர்ப்பந்தமும் கொம்பலப்பட்டதுமான தன் சரீரமாகிய களிமண்ணை அவ்வெள்ளத்தில் எறிந்துவிட்டுச் செல்லுகிருன்.

மரிக்கும் தறுவாயிலிருக்கிற ஒரு முடவன்: இதோ! போகிறேன், ராஜா வருகிருர். அவரைச்சூழ தேவதூதர்களின் கூட்டம் நிற்கக் காண்கிறேன். எனக்கிவ்வளவு நாளாய் என் பிரயாணத்தில் நன்ருய் உதவி செய்த என் ஊன்றுகோல்களே, போய்வாருங்கள், இனி உங்கள் உதவி எனக்கு வேண்டியதில்லையென்று சொல்லி அவற்றை அப்பாலே எறிந்துவிட்டான். தன் கந்தைகளையும் களைந்துவிட்டு மரணமாகிய ஆற்றைக் கடந்து கிரீடத்தைப் பெற்றுக்கொண்டான்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஜாதியாரிலும் ஜனத்தாரிலும் பாஷைக்காரரிலும் சிலர் இப்படி மரணமாகிய ஆற்றை நிமிஷந்தோறும் கடந்துபோய்க்கொண்டேயிருக்கிருர்கள்.

அஞ்ஞானமும் வீண்பக்தியும் நிறைந்த ஜனங்களுக்குள்ளே வெகுகாலம் கர்த்தருடைய ஊழியம் செய்து வந்த ஒருவரிருந்தார். ஒருவராவது அவருடைய கஷ்டத்தில் அவரோடு அனுதாபப்பட்டு அவரை உற்சாகப்படுத்தவில்லை. அவரைச்சூழ இருந்தவர்களில் ஒருவராவது அவர் செய்த வேலையின் அருமையை உணர்ந்துகொள்ளவில்லை. அதிகக் கண்ணீரோடும் ஜெபத்தோடும் கஷ்டத்தோடும் பிரயாசத்தோடும் வெகுகாலம் உழைத்தும் அங்குமிங்கும் ஒவ்வோர் குணப்படுதலைக் கண்டாரே ஒழிய தமது வேலைக்குத் தகுந்த பலனைக்

காணும் சலாக்கியம் இவருக்குக் கிடைக்கவில்லை. என்றாலும் தன் சிலுவையைச் சுமக்க மனமற்றவராக அதிகப் பாரமாயிருக்கிறது என்றாவது எந்நேரமும் இடைவிடாமல் அமுக்கிக்கொண்டேயிருக்கிறது என்றாவது ஒருபோதும் முறையிடவில்லை. கடைசியாக ஒரு ஓய்வுநாள் சாயந்தரம் சூரியன் அஸ்தமிக்கும்போது அவருடைய பாடும் வேதனையும் நீங்கி மரணமாகிய ஆற்றின் கரையில் வந்து நிற்பதுபோல அவருக்குத் தோன்றிற்று. அவருடைய சரீரம் மரணத்தறுவாயிலிருந்தது. அவருடைய ஆவியோ தனக்காக சிலுவை சுமந்த ஆண்டவரை நோக்கிற்று.

அந்தப் பரம நகரத்தில் நடக்குங் காரியங்களைக் கண் கண்டதுமில்லை, காது கேட்டதுமில்லை. அதின் மிகுதியான காட்சியைக் காணும் சலாக்கியம்பெற்ற சிலர் தாங்கள் கண்ட காட்சியைச் சொல்ல இடம் பெறவில்லை. என்றாலும் சிலுவை சுமந்தவர்களில் பிரதானமானவர் அங்கேயிருக்கிறாரென்றும் தங்கள் சிலுவையைச் சுமந்து கொண்டு அவருக்குப் பின்சென்ற திரள் கூட்டம் அவரைச் சூழ்ந்துகொண்டிருக்கிறதென்றும் யாதொரு பயமுமின்றி சொல்லலாம்.

1 வெள்ளை அங்கி தரித்து
சுடர் ஒளியுள்ளோர் ஆர்?
தேவனை ஆராதித்து
பூரிப்போர், களிப்போர் ஆர்?
சிலுவையை எடுத்து,
யேசுவின் நிமித்தமே

யுத்தம் பண்ணிப் பொறுத்து
நின்றோர் இவர்களாமே.

2 பேராபத்திலிருந்து
வந்து, விசுவாசத்தால்
தேவ நீதி அணிந்து
சுத்தமானோர், ஆதலால்
ஓய்வில்லாமல் கர்த்தரை
கிட்டி நின்று சேவிப்பார்;
கர்த்தர் சுத்தவான்களை
சேர்த்து ஆசீர்வதிப்பார்.

3 அவர் ஜெயங்கொண்டோராய்
இனி சோதிக்கப்படார்;
தீமை நீங்கிச் சுத்தராய்
பசி தாகம் அறியார்;
மத்தியான உஷ்டணம்
இனி பட மாட்டாதே;
அவர்கள் மெய்ப் பாக்கியம்
வளர்ந்தோங்கும் நித்தமே.

4 தேவ ஆட்டுக்குட்டியும்
அவர்களைப் போஷிப்பார்;
ஜீவ தருக் கனியும்
ஜீவ நீரும் அளிப்பார்;
துக்கம் துன்பம் ஒழித்து
குறை யாவும் நீக்குவார்;
கண்ணீரையும் துடைத்து
அன்பினால் நிரப்புவார்.

முற்றிற்று.

பக்தி முயற்சிக்கும், வேதத் தெளிவுக்கும் உதவும் ஆவிக்குரிய புத்தகங்கள்

		ரூ.	அ.	பை
1	**இரட்சிப்பு, அதின் நிச்சயம், அதின் சந்தோஷம்**	0	3	0
2	**பொன் தூள்**	0	4	0
3	**பரம குரு** (இந்து மத நூலாதாரங்கொண்டு இயேசுவே உண்மையான தேவன் என்றும், இரட்சகர் என்றும் விளக்கப்பட்டிருக்கிறது. இதைப் பொறுமையோடும் கவனத்தோடும் படிக்கிறவர்கள் பலனடைவார்கள்)	0	2	0
4	**கைலாச மகா ரிஷி சரித்திரம்** (சுந்தர் சிங் கூறியபடியே விபரமாயுள்ளது)	0	8	0
5	**ஆவிக்குரிய ஜீவிய விளக்கம்** (By சாது சுந்தர் சிங்)	0	8	0
6	**சாது சுந்தர் சிங் பிரசங்கங்கள்**	1	0	0
7	**D. L. மூடியின் பிரசங்கங்கள்**	1	0	0
8	**ரோமான் மார்க்க சீர்தூக்கல்** (வேத ஆதாரத்துடன்)	0	6	0
9	**உனக்கு அநேக நல்ல சிநேகிதர் வேண்டுமா?**	0	0	6
10	**ஸ்திரிகள் நகை போடலாமா?** (மகாத்மா காந்தி, சாமி சிதம்பரனர், Rev. T. உவாக்கர், நாலடியார் முதலியவர்களின் மேற்கோளுடன்)	0	1	0

11	இயேசு கிறிஸ்துவும், பரிபூரண இரட்சிப்பும்	0	1	6
12	இவ்வளவு பெரிதான இரட்சிப்பு	0	2	6
13	சாது சுந்தர்சிங் சரித்திரம்	1	0	0
14	திருவடி உபதேசம்	0	8	0
15	சாது சுந்தர்சிங் ஆத்மீக வாழ்க்கையின் தியானங்கள்	1	2	0
16	சாது சுந்தர்சிங் பொன் மொழிகள்	0	2	0
17	கைலாச மகாரிஷி சரித்திரம் (இங்கிலீஷில்)	1	4	0
18	சார்ல்ஸ் பின்னி சரித்திரமும், மார்க்க எழுப்புதலைப் பற்றிய அவரது பிரசங்கங்களும்	0	8	0
19	பிரதான வரமாகிய அன்பு	0	3	0
20	சாருப மகிமை விலாசம் (மேற் காட்டிய இரு புத்தகங்களும் சிறியவையாயினும் சிறந்த பொருள்களை யுடையன. இவை D. L. மூடியின் சீஷனும், சிறந்த சாஸ்திரியுமான ஹென்ரி டிரம்மண்ட் என்பவரால் எழுதப்பட்டவை)	0	2	0
21	சிலுவை சுமந்தோன்	0	6	0
22	சிறந்த தேவ ஊழியன்	0	8	0
23	சுவிசேஷப் பிரசங்கங்கள்	1	8	0

24	சண்முகநாத கவிராயர் கிறிஸ்தவரான சரித்திரம்	0	4	0
25	இரக்ஷணிய சமய நிர்ணயம் (By வித்வான் கிருஷ்ணபிள்ளை)	2	4	0
26	இரக்ஷிப்பின் ஒரே வழி (By. ஆர்தர் வக்கீல்)	0	12	0

இவை கிடைக்கும் விலாசம்:-

S. தாமஸ் இரத்தினம்,

நாசரேத் P. O.,

திருநெல்வேலி Dt.

டாஸ் பிரஸ், நாசரேத்; Cs. 2000; 25—7—1956.